
தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வெற்றிக்கான ஒரு புதிய பாதை

# உன் சீஸை நகர்த்தியது நான்தான்



வேறொருவரின் புதிர்க்கட்டத்தில்
சுண்டெலிகளாக வாழ மறுப்பவர்களுக்கு


## தீபக் மல்ஹோத்ரா

ஹார்வர்டு பிசினஸ் ஸ்கூல்


தமிழில்: நாகலட்சுமி சண்முகம்

Tamil translation of *I Moved Your Cheese*
by *Deepak Malhotra*

www.t.me/tamilbooksworld

உன் சீஸை நகர்த்தியது நான்தான்
நீங்கள் ஒரு புதிர்க்கட்டடத்திற்குள் சிக்கிக் கொண்டிருக்கும் ஒரு சுண்டெலியாக இருந்து, யாரோ ஒருவர் அங்கிருக்கும் சீஸை நகர்த்திக் கொண்டே இருந்தால், நீங்கள் என்ன செய்வீர்கள்?

10 வருடங்களுக்கு முன்பு வெளியாகி இன்றும் சிறப்பாக விற்பனையாகிக் கொண்டிருக்கும் 'என் சீஸை நகர்த்தியது யார்?' என்ற நீதிக் கதை இக்கேள்விக்கு இப்படி பதிலளித்தது: தவிர்க்க முடியாத, ஆனால் உங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட மற்றத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்; விஷயங்கள் ஏன் இப்படி இருக்கின்றன என்று வியந்து கொண்டு உங்கள் நேரத்தை வீணாக்காமல் சீஸை தேடத் துவங்குங்கள்.

www.t.me/tamilbooksworld

ஆனால், ஹார்வர்டு பிசினஸ் ஸ்கூலில் பேராசிரியராகப் பணிபுரியும் தீபக் மல்ஹோத்ரா இக்கேள்விக்கு முற்றிலும் வித்தியாசமான ஒரு பதிலை வழங்குகிறார்.
தனித்துவமான, சாகசத்தை விரும்புகின்ற, தமது யதார்த்தத்தை அப்படியே ஏற்றுக் கொள்ள மறுக்கின்ற, மேக்ஸ், பிக், ஸெட் ஆகிய மூன்று சுண்டெலிகளைப் பற்றிய உத்வேகமூட்டும் ஒரு கதையை மல்ஹோத்ரா இதில் கூறுகிறார்.
அவற்றின் வாழ்க்கை நம் கண்முன் விரிவதை நாம் பார்க்கும்போது, வெறுமனே கண்மூடித்தனமாக சீஸைத் துரத்திச் செல்வதற்குப் பதிலாக, புதிர்க்கட்டத்தைவிட்டுத் தப்பிப்பதற்கும், அதை நம்

www.t.me/tamilbooksworld

விருப்பத்திற்கு ஏற்ப மாற்றி வடிவமைப்பதற்கும் தேவையான திறனை நாம் ஒவ்வொருவரும் பெற்றுள்ளதை நாம் கண்டறிகிறோம். நமக்கு விருப்பமான புதிய சூழல்களையும் யதார்த்தங்களையும் நம்மால் உருவாக்க முடியும், ஆனால் வேறொருவரின் புதிர்க்கட்டத்தில் உள்ள ஒரு சாதாரணச் சுண்டெலிதான் நாம் என்று நம் மனத்தில் ஆழமாகப் பதிந்து போயுள்ள எண்ணத்தை நாம் முதலில் களைந்தாக வேண்டும் என்பதை 'உன் சீஸை நகர்த்தியது நான்தான்' என்ற இப்புத்தகம் நமக்கு நினைவூட்டுகிறது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# உன் சீஸை நகர்த்தியது நான்தான்

தீபக் மல்ஹோத்ரா
ஹார்வர்டு பிசினஸ் ஸ்கூல்

தமிழில்: நாகலட்சுமி சண்முகம்

MANJUL
மஞ்சுள் பப்ளிஷிங் ஹவுஸ்

www.t.me/tamilbooksworld

First published in India by
MANJUL
Manjul Publishing House Pvt. Ltd.
Corporate Office:
2nd Floor, Usha Preet Complex,
42 Malviya Nagar, Bhopal 462 003 - India
E-mail: manjul@manjulindia.com
Website: www.manjulindia.com
Marketing Office:
7/32, Ground Floor, Ansari Road,
Daryaganj, New Delhi 110 002
Email: booksupplyco@manjulindia.com
Tamil language translation of
I MOVED YOUR CHEESE
by Deepak Malhotra
copyright © 2011 by Deepak Malhotra
First published by Berrett-Koehler
Publishers, Inc.,

www.t.me/tamilbooksworld

San Francisco, CA, USA. All Rights Reserved.
This edition first published in 2013
ISBN 978-81-8322-309-6
Translation by Nagalakshmi Shanmugam
All rights reserved. No part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted, in any form or by any means (electronic, mechanical, photocopying, recording or otherwise) without the prior written permission of the publisher. Any person who does any unauthorized act in relation to this publication may be liable to criminal prosecution and civil claims for damages.

www.t.me/tamilbooksworld

ஆர்யாவிற்கும் ஜெய்க்கும் நீங்கள் கண்டிப்பாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்பும் விஷயம் இதுதான்

www.t.me/tamilbooksworld

உள்ளடக்கம்

முன்னுரை
உன் சீஸை நகர்த்தியது நான்தான்
நல்ல புத்தகம்
மேக்ஸ்
ஸெட்
ஏன்
சாத்தியமற்ற விஷயம்
மேலே
பிக்
வெளியே
என் சீஸை நகர்த்தியது யார்?
உன் சீஸை நகர்த்தியது நான்தான்
சுவர்கள்
சுண்டெலிக்குள் ஒரு புதிர்க்கட்டம்
முற்றிலும் வித்தியாசமான ஒரு
சுண்டெலி
சில சுண்டெலிகள் பெரியவை
கலந்துரையாடல் கேள்விகள்

www.t.me/tamilbooksworld

தனிநபர்களுக்கான கேள்விகள்

குழுவினரோடு கலந்துரையாடுவதற்கான கேள்விகள்

அலுவலக சகாக்களோடு கலந்துரையாடுவதற்கான கேள்விகள்

கல்வியாளர்களுக்கு ஒரு குறிப்பு

மேலாளர்களுக்கு ஒரு குறிப்பு

நூலாசிரியருக்கான கேள்விகள்

நன்றி

www.t.me/tamilbooksworld

முன்னுரை

ஒரு புத்தகம் இரண்டு கோடிப் பிரதிகள் விற்பனையாகியுள்ளபோது, அதன் வாசகர்களின் அபிப்பிராயத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய உரிய மதிப்பு, அப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ள மையக் கருத்திற்கு ஒருவர் ஏன் சவால்விடுகிறார் என்பதற்கு விளக்கம் அளிப்பதை ஒரு கடமையாக்குகிறது. அதை இப்புத்தகத்தின் முதல் சில பக்கங்களில் சுருக்கமாகக் கொடுக்க நான் முயற்சித்திருக்கிறேன். ஆனாலும், அதற்கான உண்மையான பதில் இந்த நீதிக்கதையிலேயே ஒளிந்துள்ளது.

இது தனித்து இயங்கும் ஒரு புத்தகமாக எழுதப்பட்டுள்ளது, இது அவ்வாறுதான் படிக்கப்பட வேண்டும். ஆனாலும், 'என் சீஸை நகர்த்தியது யார்?' என்ற

www.t.me/tamilbooksworld

புத்தகத்திற்கான ஓர் எதிர்ப்புரையாகவோ அல்லது அதன் நீட்டிப்பாகவோ இது எழுதப்பட்டுள்ளதா என்று பலர் என்னிடம் கேட்பதில் வியப்பொன்றும் இல்லை. இதை இன்னொரு விதமாக இப்படிக் கேட்கலாம்: 'என் சீஸை நகர்த்தியது யார்?' என்ற புத்தகத்தில் கூறப்பட்டுள்ள செய்தி தவறானது என்று நான் முழங்குகிறேனா அல்லது அது முழுமையற்றது என்று கூறுகிறேனா? அது தவறானது மட்டுமல்ல, முழுமையற்றதும்கூட என்பதுதான் என் பதில்.

வாழ்வில் பெரிய மாற்றங்களை, ஏன், சிறிய மாற்றங்களைக்கூடக் கையாள்வதற்கு மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றவர்கள் 'என் சீஸை

www.t.me/tamilbooksworld

நகர்த்தியது யார்?' என்ற புத்தகத்தைக் கட்டாயமாகப் படிக்க வேண்டும். மாற்றம் நிகழ்கிறது, அது நம்முடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டுக்கூட இருக்கக்கூடும், ஆனால் அதற்கேற்ப நம்மைப் பொருத்திக் கொண்டு தொடர்ந்து முன்னேறிச் செல்வதற்கான வலிமையை நாம் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியது அவசியம் என்பதை அப்புத்தகம் நினைவுபடுத்துகிறது. இத்தகவல் தவறானதோ அல்லது அற்பமானதோ அல்ல. ஆனால் அது முழுமையானதல்ல. மாற்றத்திற்கு ஏற்ப நம்மைப் பொருத்திக் கொள்வதுதான் செயல்படுத்தத்தக்க ஒரே நடவடிக்கையாகத் தோன்றினாலும்கூட, கண்ணை மூடிக் கொண்டு அந்த மாற்றத்தை

www.t.me/tamilbooksworld

வெறுமனே ஏற்றுக் கொள்வதையும், அதற்கு ஏற்றாற்போல் ஆர்வத்துடன் நம்மைப் பொருத்திக் கொள்வதையும்விடக் கூடுதலாக நாம் சிலவற்றைச் செய்தாக வேண்டும். அந்த மாற்றம் நம்மீது ஏன் திணிக்கப்படுகிறது என்பதையும், எதிர்காலத்தில் நம்முடைய வாழ்வின்மீது நாம் எவ்வாறு அதிகக் கட்டுப்பாட்டுடன் இருப்பது என்பதையும், நாம் துரத்திச் செல்லும் இலக்குகள் சரியானவைதானா என்பதையும், மற்றவர்களின் வடிவமைப்புகளுக்கு உட்பட்டு நாம் இருக்கின்ற புதிர்க்கட்டங்களில் இருந்து தப்பிப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையும் நாம் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

www.t.me/tamilbooksworld

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், மாற்றத்திற்கு ஏற்ப உங்களைச் சிறப்பாகப் பொருத்திக் கொள்வது வெற்றிக்கோ அல்லது மகிழ்ச்சிக்கோ போதுமானதல்ல.
சில வழிகளில், 'என் சீஸை நகர்த்தியது யார்?' புத்தகத்தின் மையக் கருத்து முழுமையற்றதாக அமைந்துள்ளதோடு, மிக ஆபத்தானதாகவும் விளங்குகிறது. தங்களுடைய குறைபாடுகளை உடனடியாக ஏற்றுக் கொள்வது புத்திசாலித்தனம் என்று மற்றவர்களிடம் கூறுவதற்கு முன் நாம் இன்னொரு முறை சிந்தித்துப் பார்க்க வேண்டும். விஷயங்கள் ஏன் இப்போது இருக்கும் நிலையில் இருக்கின்றன என்று வியந்து கொண்டிருப்பதில் நேரத்தை வீணாக்குவதற்குப் பதிலாக,

www.t.me/tamilbooksworld

தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள யதார்த்தத்தை அவர்கள் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எதிர்காலத்தில் வரக்கூடிய புதுமைப் புனைவாளர்கள், பிரச்சனையைத் தீர்ப்பவர்கள், தொழில்முனைவோர்கள், தலைவர்கள் ஆகியோருக்கு நாம் பரிந்துரைக்கக்கூடாது. வேறொருவருடைய புதிர்க்கட்டத்தில் சீஸைத் துரத்திக் கொண்டு செல்லும் வெறும் சுண்டெலிகள்தான் அவர்கள் என்று மக்களிடம் கூறுவதை நாம் நிறுத்த வேண்டும். 'என் சீஸை நகர்த்தியது யார்?' புத்தகம் இப்படிப்பட்ட செய்திகளை ஊக்குவிக்க முற்படவில்லை என்பதை நான் அறிவேன். ஆனால், பல வாசகர்களுக்கு இச்செய்திகள்

www.t.me/tamilbooksworld

ஆணித்தரமாகப் போய்ச் சேர்ந்துள்ளன. உண்மையிலேயே எந்த விஷயங்கள் தங்களை மட்டுப்படுத்துகின்றன என்பது குறித்து மக்கள் தாங்கள் கொண்டுள்ள அனுமானங்களைப் பற்றிக் கேள்வி எழுப்புவதற்கு அவர்களுக்கு உதவுவதும், தங்களுடைய நடத்தையை மட்டுமல்லாமல் தங்களுடைய சூழல்களையும் மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க அவர்களை ஊக்குவிப்பதும்தான் 'உன் சீஸை நகர்த்தியது நான்தான்' என்ற இப்புத்தகத்தின் நோக்கம். நீண்டகாலமாக நிலைப்படுத்தப்பட்டுள்ள முன்னுதாரணங்கள், வலிமையான

www.t.me/tamilbooksworld

சமுதாய விதிமுறைகள், பற்றாக்குறையாக உள்ள வளவசதிகள், மற்றவர்களின் சக்திவாய்ந்த எதிர்பார்ப்புகள் ஆகியவற்றின் முன்னிலையில், தங்களது விதியைக் கட்டுப்படுத்துவதற்கும், தங்களது சுற்றுச்சூழலை மறுவடிவமைப்பதற்கும், தாங்கள் எதிர்கொண்டுள்ள தடைகளில் இருந்து மீள்வதற்குமான தமது திறனைத் தனிநபர்கள் பெரும்பாலும் மிகக் குறைவாக மதிப்பிட்டு விடக்கூடும். உத்தியோக வளர்ச்சி, புதுமை, தொழில் முனைவு, படைப்புத்திறன், பிரச்சனையைத் தீர்த்தல், தலைமைத்துவம், வியாபார வளர்ச்சி, மற்றும் சொந்த வளர்ச்சி ஆகிய பகுதிகளில் கிடைக்கும் வெற்றி, அனுமானங்கள் குறித்துக் கேள்வி

www.t.me/tamilbooksworld

கேட்பதற்கும், சுற்றுச்சூழலை மறுவடிவமைப்பதற்கும், முற்றிலும் வேறு விதிமுறைகளைக் கொண்டு, அதாவது உங்களுடைய சொந்த விதிமுறைகளைக் கொண்டு விளையாடுவதற்குமான திறனைச் சார்ந்துள்ளது.

'என் சீஸை நகர்த்தியது யார்?' புத்தகத்தைப் போலவே, இப்புத்தகமும் ஒரு புதிர்க்கட்டத்தில் வாழ்கின்ற சுண்டெலிகளைப் பற்றிய ஒரு கதையைக் கூறுகிறது. இக்கதையைப் பொறுத்தவரை, மேக்ஸ், ஸெட், மற்றும் பிக் ஆகிய மூன்று தனித்துவமான, சாகசத்தை விரும்புகின்ற சுண்டெலிகள்தான் முக்கியக் கதாபாத்திரங்கள். அவற்றின் வாழ்க்கை நம் கண்முன் விரிவதையும்,

www.t.me/tamilbooksworld

ஒன்றோடொன்று குறுக்கிடுவதையும் நாம் பார்க்கும்போது, வெறுமனே கண்மூடித்தனமாக சீஸைத் துரத்திச் செல்வதற்குப் பதிலாக, புதிர்க்கட்டத்தைவிட்டுத் தப்பிப்பதற்கு அல்லது அதை நம்முடைய விருப்பத்திற்கு ஏற்றாற்போல் மறுவடிவமைப்பதற்கான திறனை நாம் ஒவ்வொருவரும் பெற்றுள்ளதை நாம் கண்டறிகிறோம். நமக்கு விருப்பமான புதிய சூழல்களையும் யதார்த்தங்களையும் நம்மால் உருவாக்க முடியும், ஆனால் வேறொருவரின் புதிர்க்கட்டத்தில் உள்ள சாதாரணச் சுண்டெலிகள்தான் நாம் என்று நம் மனத்தில் ஆழமாகப் பதிந்து போயுள்ள எண்ணத்தை நாம் முதலில் களைந்தாக வேண்டும். அதை

www.t.me/tamilbooksworld

ஸெட் இவ்வாறு விளக்குகிறது: "மேக்ஸ், ஒரு சுண்டெலி புதிர்க்கட்டத்திற்குள் இருப்பது பிரச்சனையல்ல, ஆனால் புதிர்க்கட்டம் அந்தச் சுண்டெலிக்குள் இருப்பதுதான் பிரச்சனையே."

இப்புத்தகம் பின்வரும் மக்களுக்காக எழுதப்பட்டுள்ள ஒன்று: தங்களுடைய தற்போதையச் சூழல்களுக்குள் சிக்குண்டு கிடப்பதாக உணர்கின்ற மக்கள் மற்றும் நிறுவனங்கள்; கடினமாக உழைத்துக் கொண்டிருக்கின்ற, சில சமயங்களில் தங்கள் வாழ்விலும் வேலையிலும் சிறிது வெற்றியையும் பெற்றுக் கொண்டிருக்கின்ற, ஆனால் தாங்கள் செய்து கொண்டிருப்பவற்றில் அர்த்தத்தையோ மனநிறைவையோ

www.t.me/tamilbooksworld

கண்டுபிடிப்பதற்குப் போராடிக் கொண்டிருப்பவர்கள்; தாங்கள் தேர்ந்தெடுக்காத ஒரு வேலையைச் சிறப்பாகச் செய்து கொண்டிருப்பவர்கள்; விஷயங்களைச் செய்வதற்கான பழைய வழிகளை மாற்றுவது வெற்றியல்ல, மாறாக அவற்றை மறுகற்பனை செய்வதுதான் வெற்றி என்ற கண்ணோட்டத்தைக் கொண்ட மக்கள்; தங்கள் எஞ்சிய வாழ்நாளில் தங்களால் எதை சாதிக்க முடியும், தாங்கள் எதைச் செய்ய வேண்டும் என்று கருதுகின்ற, அது குறித்து உத்வேகத்தை நாடுகின்றவர்கள். (மேலே குறிப்பிடப்பட்டு இருக்கின்ற விவரிப்புகளில் நீங்கள் எதில் பொருந்துகிறீர்கள் என்பது

www.t.me/tamilbooksworld

உங்களுக்கு உறுதியாகத் தெரியவில்லை என்றாலும், தொடர்ந்து இப்புத்தகத்தைப் படியுங்கள். இது ஒரு சிறிய புத்தகம்தான்!)

மேக்ஸ், ஸெட், பிக் ஆகியோர் என்னுடன் இப்போது நெடுங்காலமாக இருந்து வருகின்றனர். ஆனால் அவர்களது சாகசச் செயல்களை நான் நினைத்துப் பார்க்கும் ஒவ்வொரு முறையும், என்னுடைய உத்வேகம் புதுப்பிக்கப்படுவதை என்னால் உணர முடிகிறது. நீங்களும் இதிலிருந்து உத்வேகம் பெறுவீர்கள் என்று நான் நம்புகிறேன். இப்புத்தகத்தைப் படிப்பது உங்கள் முகத்தில் ஒரு புன்னகைக் கீற்றைத் தோற்றுவிக்கும் என்றும், நாம் ஏன் புன்னகைக்கிறோம் என்று நீங்கள் வியந்து கொண்டிருப்பீர்கள் என்றும்

www.t.me/tamilbooksworld

நான் நம்புகிறேன்.

www.t.me/tamilbooksworld

# உன் சீஸை நகர்த்தியது நான்தான்

www.t.me/tamilbooksworld

நல்ல புத்தகம்
அவர்கள் அதை ஒரு புரட்சி என்று அழைத்தனர். அந்தப் படிப்பினை, அந்த உள்நோக்கு அந்தப் புதிர்க்கட்டம் நெடுகிலும் பரவியிருந்தது. அந்த நல்லப் புத்தகத்தில் இருந்த விஷயத்தைக் கேள்விப்பட்டிராத சுண்டெலி அங்கு எதுவுமே இருக்கவில்லை.

அது மிகவும் ஆழ்ந்த உள்நோக்காக இருந்தது. மிக முக்கியமாக, அது ஒருவரது காரணப்படுத்தும் திறனை அவ்வளவாகச் சார்ந்திருக்கவில்லை. இந்த இயல்புதான் தலைசிறந்த உண்மைகள் அனைத்தின் அடையாளச் சின்னம் என்பதை எந்தவொரு சுண்டெலியும் உங்களிடம் கூறும். எனவே, இருப்பதிலேயே அதுதான் தலைசிறந்த உண்மை, மிக

www.t.me/tamilbooksworld

முக்கியமான உண்மை என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. எல்லாம் சுலபமாக முடிந்தன.
அப்புத்தகம் பின்வரும் உண்மைகளைத் தெளிவாக எடுத்துரைத்தது: மாற்றம் நிச்சயமாக நிகழ்கிறது. ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டு அதைப் பற்றி நீங்கள் குறைகூறலாம், அல்லது காலத்தோடு சேர்ந்து நீங்களும் மாறலாம். மாற்றத்தைக் கண்டு அஞ்சாதீர்கள். மாற்றத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். புதிர்க்கட்டத்தில் நிகழும் விஷயங்கள் உங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை. அதை நீங்கள் எதிர்கொள்ளும் விதம் மட்டுமே உங்கள் கட்டுப்பாட்டில் உள்ளது.
இந்த உள்நோக்கை அனைத்துச்

www.t.me/tamilbooksworld

சுண்டெலிகளும் புரிந்து கொண்டன என்றாலும், இதை அவை அனைத்தாலும் தம் வாழ்வில் செயல்படுத்த முடியவில்லை. சில சுண்டெலிகள் முழுமையாக வெற்றி பெற்றன. மாற்றம் தவிர்க்க முடியாதது, கட்டுப்படுத்த முடியாதது என்பதை அவை கற்றுக் கொண்டன.

புதிர்க்கட்டத்தின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தங்கள் வசம் இல்லை என்பதை அவை ஏற்றுக் கொண்டன. தலைவிதி என்று அதற்குப் பெயரிட்டு, அதை ஏற்றுக் கொள்ள அவை உறுதி பூண்டன.

பல சுண்டெலிகள் சிறிதளவு மட்டுமே வெற்றி பெற்றன. பயம், பயத்தில் உறைதல், மனச்சோர்வு, அவநம்பிக்கை ஆகியவற்றை அவை அவ்வப்போது

www.t.me/tamilbooksworld

அனுபவிக்கத்தான் செய்தன. ஆனால் கடந்த காலத்தைவிட, இப்போது அப்படிப்பட்டக் கணங்கள் குறைவாகவே ஏற்பட்டன. புதிர்க்கட்டத்தில் இந்தச் சுண்டெலிகள் தமது இனத்தைக் குறிப்பிடத்தக்க அளவு மேம்படுத்திக் கொண்டன. அந்த நல்லப் புத்தகம் கற்றுக் கொடுத்த விஷயத்தைப் பற்றி அவ்வளவாக நினைத்துப் பார்க்காத சுண்டெலிகளும் நிச்சயமாக இருந்தன. கொள்கை அளவில் அவை அந்த உள்நோக்குடன் உடன்பட்டாலும், தம்முடைய வழிகளை மாற்றிக் கொள்வதற்கான நேரமோ ஆற்றலோ அவற்றுக்கு இருக்கவில்லை. பழக்கங்களை உடைத்தெறிவது அவ்வளவு சுலபமான காரியமா என்ன ? அடுத்த வாரம்

www.t.me/tamilbooksworld

பார்க்கலாம், அடுத்த வருடம் பார்க்கலாம் என்று அவை தம் முயற்சியைத் தள்ளிப் போட்டுக் கொண்டே இருந்தன. மொத்தத்தில், புதிர்க்கட்டத்தில் இப்போது வாழ்க்கை மிகவும் வித்தியாசமாக இருந்தது. கடந்த காலத்தில், சீஸ் ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்திற்கு மாறியபோது, அனைத்துச் சுண்டெலிகளும் நம்பிக்கையற்று இருந்தன. என்ன நிகழ்ந்தது என்பதை அவற்றால் புரிந்து கொள்ள முடியவில்லை. தமது அதிர்ஷ்டத்தை அவை நொந்து கொண்டன. ஒரு மூலையில் அமர்ந்து, சீஸ் திரும்பி வருவதற்காகப் பிரார்த்தனை செய்துவிட்டுக் காத்துக் கொண்டிருந்தன. அவை

www.t.me/tamilbooksworld

குழப்பமடைந்து, கோபத்தில் குதித்தன. மோசமாக இருந்த தமது வாழ்க்கையை மேலும் மோசமாக்கிக் கொண்டன. ஆனால், அந்த நல்லப் புத்தகத்தைப் படித்தப் பிறகு, அந்தச் சுண்டெலிகள் வேறுவிதமாகச் செயல்பட்டன. சீஸ் மறைந்து போனது அதிர்ச்சியளித்தாலும், அவற்றால் சீஸ் நகர்ந்துவிட்டிருந்ததற்கான காரணத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் இப்போது அந்தச் சுண்டெலிகள் புதிய சீஸ் கிடங்கைத் தேடத் துவங்கின. அந்த நல்லப் புத்தகத்தின் தத்துவத்தை முழுமையாக சுவீகரித்துக் கொண்டிருந்த சுண்டெலிகள்தான் புதிய சீஸைத் தேடுவதற்கு முதலில் ஆயத்தமாயின.

www.t.me/tamilbooksworld

பழைய பழக்கங்களை உடைத்தெறிவதற்கு சிரமப்பட்டுக் கொண்டிருந்த, அத்தத்துவத்தைக் கடைபிடிக்க முடியாமல் போராடிக் கொண்டிருந்த சுண்டெலிகள் மிகவும் மெதுவாக நகர்ந்தன. ஆனால், காலத்தோடு சேர்ந்து தாம் மாறியாக வேண்டும் என்பதை அவையும் புரிந்து கொண்டன. இறுதியில், இந்தச் சுண்டெலிகளும் அதிகமான சீஸைத் தேடத் துவங்கின.

மாறிக் கொண்டிருக்கும் காலத்தோடு சேர்ந்து மாறுவதற்குக் கற்றுக் கொண்டதன் மூலம், அதிக சீஸைக் கண்டுபிடிப்பதில் அந்தச் சுண்டெலிகள் வெற்றி பெற்றன. சீஸை முன்பு எப்போதையும்விட இப்போது அதிக விரைவாக அவை கண்டுபிடித்தன.

www.t.me/tamilbooksworld

அந்த நல்லப் புத்தகம் கூறியது சரிதான்! அந்தச் சுண்டெலிகளிடம் சீஸ் அதிக அளவில் இருந்தது. முன்பைவிட அதிக வேகமாக அவை சீஸைப் பெற்றன. நீங்கள் ஒரு சுண்டெலியாக இருந்தால், இதைவிடச் சிறப்பாக உங்களுக்கு எதுவும் நடக்காது. எனவே, சீஸ் ஏன் நகர்ந்தது என்று அதன் பிறகு அச்சுண்டெலிகள் கேள்வி கேட்கவே இல்லை. அப்படிப்பட்டக் கேள்விகளுக்கு விடையேதும் இல்லை என்று அனைத்துச் சுண்டெலிகளும் ஏற்றுக் கொண்டுவிட்டன. சீஸ் நகர்வதைத் தடுப்பதற்கான திட்டங்களை வகுக்க அவை முயற்சிக்கவில்லை. தலைவிதியைக் கட்டுப்படுத்த முடியும் என்று ஒரு முட்டாள் மட்டுமே சிந்திப்பான்.

www.t.me/tamilbooksworld

எல்லாவற்றுக்கும் மேலாக, "என் சீஸை நகர்த்தியது யார்?" என்ற அறிவுக்குப் புறம்பான கேள்வியை அதன் பிறகு அவை ஒருபோதும் கேட்கவே இல்லை. வாழ்க்கை இப்போது எளிமையாக இருந்தது. ஓர் எளிய சமன்பாட்டின் மூலம் அதை இவ்வாறு விளக்கலாம்:

உங்களுக்கு சீஸ் வேண்டும்

+

ஆனால் சீஸ் அங்கு இல்லை

=

சீஸைக் கண்டுபிடிப்பதற்கு வேறு எங்கேனும் செல்லுங்கள்

ஒரு புதிர்க்கட்டத்தில் உள்ள ஒரு சுண்டெலிக்கு சீஸ் மட்டுமே தேவை.

ஆனால் . . .

மேக்ஸ் . . . அது முற்றிலும் வித்தியாசமான ஒரு சுண்டெலி.

www.t.me/tamilbooksworld

மேக்ஸ்

மேக்ஸிற்குச் சிறு வயதாக இருந்தபோது, புதிர்க்கட்டம் என்ற ஒன்று ஏன் இருந்தது என்று ஒருமுறை அது தன் அப்பா எலியிடம் கேட்டது. அக்கேள்வியை அப்பா எலியால் புரிந்து கொள்ள முடியவில்லை. மேக்ஸ் தொடர்ந்து அக்கேள்வியை வலியுறுத்தியபோது, சில கேள்விகளுக்கு விடை கிடையாது என்றும், புதிர்க்கட்டம் இருக்கிறது, அவ்வளவுதான் என்றும் அது பதிலளித்தது. புதிர்க்கட்டம் ஏன் ஒரு குறிப்பிட்ட விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது, அதில் ஏன் பல பயனற்ற வழிகள் உள்ளன என்று மேக்ஸ் கேட்டபோது, அவற்றைப் பற்றி வியந்து கொண்டு நேரத்தை வீணாக்காமல் இருக்குமாறு அது

www.t.me/tamilbooksworld

கூறியது. அதற்குப் பதிலாக, புதிர்கட்டத்திற்குள் எப்படி வளைய வருவது என்பதைக் கற்றுக் கொள்ளுமாறு மேக்ஸிற்கு அது அறிவுறுத்தியது. மேக்ஸின் அம்மாவும் அப்பாவும், "சீஸ் எங்கே இருக்கிறது என்று வியந்து கொண்டிருப்பதன் மூலமாக உன்னால் சீஸைப் பெற முடியாது; உன்னால் முடிந்த அளவுக்கு இந்தப் புதிர்க்கட்டத்தில் வேகமாக ஓடுவதன் மூலம்தான் அது உனக்குக் கிடைக்கும்," என்று கூறின.

புதிர்க்கட்டம் என்பது சுண்டெலிகளுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் ஒன்று என்று அவை விளக்கின. "உனக்குக் கொடுக்கப்பட்டுள்ளதைக் கொண்டு செயல்படு," என்று அவை

www.t.me/tamilbooksworld

அறிவுறுத்தின. அதை விடுத்து வேறு வழியில் செயல்படுவதைப் பற்றி ஓர் இளம் சுண்டெலி சிந்திப்பது சற்று ஆணவத்தனமானது என்றும் அவை மேக்ஸை எச்சரித்தன.

கண்மூடித்தனமான கீழ்ப்படிதல் என்னும் பண்பு மேக்ஸிற்கு இல்லை. உள்ளதை உள்ளபடியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது போன்ற அறிவுறுத்தல்களைத் தன்மீது திணிக்கும் நோக்கில் பேசுகின்ற பெற்றோரையும், ஆசிரியர்களையும், நண்பர்களையும், மற்றவர்களையும் மேக்ஸ் தொடர்ந்து எரிச்சலூட்டி வந்தது. அது அதிகமாகக் கேள்விகளைக் கேட்கக் கேட்க, பிற சுண்டெலிகள் எவ்வளவு குறைவாகப் புரிந்து வைத்திருந்தன என்பதை மேக்ஸ்

www.t.me/tamilbooksworld

தெளிவாகப் புரிந்து கொண்டது. அவற்றுக்கு அதிகமான விஷயங்கள் தெரிந்திருந்த போதிலும் வெகு குறைவாகவே அவை அவ்விஷயங்களைப் புரிந்து கொண்டிருந்தன.

அந்த நல்லப் புத்தகம் ஒருநாள் மேக்ஸின் கண்ணில் பட்டது. அது அதற்கு அளவற்றக் கோபத்தை ஏற்படுத்தியது. இப்படிப்பட்ட ஒரு புத்தகம் எப்படிப் பரவலாகப் படிக்கப்பட முடியும் என்பதும், எப்படிக் கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்ளப்பட முடியும் என்பதும் மேக்ஸிற்குப் புரியவில்லை.

புத்தகத்தைப் படித்தப் பிறகு, மற்ற அனைத்துச் சுண்டெலிகளும் எந்தக் கேள்வியும் இன்றி மாற்றத்தை ஏற்றுக்

www.t.me/tamilbooksworld

கொள்ளத் தீர்மானித்திருந்தன. ஏனெனில், மாற்றம் தவிர்க்க முடியாதது, கட்டுப்படுத்த முடியாதது என்று அப்புத்தகம் கற்றுக் கொடுத்திருந்தது.

ஆனால் மேக்ஸ் ஒரு வித்தியாசமான சுண்டெலி. அப்புத்தகத்தைப் படித்து முடித்தப் பிறகு, அதில் கூறப்பட்டிருந்த விஷயத்திற்கு நேரெதிரானதைச் செய்வதென்று அது உறுதி பூண்டது. சீஸை நகர்த்தியது யார் என்பதைக் கண்டுபிடிப்பதில் மேக்ஸ் தீர்மானமாக இருந்தது. சீஸ் ஏன் நகர்த்தப்பட்டது என்பதைக் கண்டுபிடிப்பதிலும் அது உறுதியாக இருந்தது. புதிர்க்கட்டம் ஏன் தற்போதைய நிலையில் இருந்தது என்பதைக் கண்டுபிடிக்கவும், அந்தப் புதிர்க்கட்டத்தில் தனக்குப் பிடிக்காத

www.t.me/tamilbooksworld

விஷயங்களை மாற்றுவதென்றும் அது முடிவு செய்தது. எனவே, அது குறித்துச் செயலில் இறங்கியது.

காலம் உருண்டோடியது.

www.t.me/tamilbooksworld

ஸெட்

ஸெட் என்ற சுண்டெலிக்கு சீஸின்மீது அவ்வளவு அக்கறை இல்லை. சீஸ் தன் உடலை உறுதியாக வைப்பதற்கு உதவியதால் மட்டுமே அது சீஸை உட்கொண்டது. அது தன் உடலை உறுதியாக வைத்திருப்பதைப் பற்றி அக்கறை கொண்டதற்குக் காரணம், தன் மனத்தை உறுதியாக வைத்திருப்பதற்கு அது தேவைப்பட்டது என்பதுதான்.

வெகுசில சுண்டெலிகள் மட்டுமே ஸெட்டிடம் ஆழமாகப் பேசியிருந்தாலும், மிகவும் புத்திசாலியான சுண்டெலி என்று அது பெயர் வாங்கியிருந்தது. அது பிரபலமான சுண்டெலியாக இருந்துவந்தபோதிலும், பொதுவாக அது முக்கியமான விஷயங்களில் மட்டுமே பேசியது. அதுவும், வேறொரு

www.t.me/tamilbooksworld

சுண்டெலி அந்த உரையாடலைத் துவங்கியபோது மட்டுமே பேசியது. ஸெட் மற்ற சுண்டெலிகளுடன் இருப்பதை விரும்பியது. ஆனால் தனிமைக் கணங்களையும் அது வெகுவாக ரசித்தது.

ஸெட்டின் ஆளுமை காந்தம் போன்றது. அதன் கண்களில் தெறித்த ஒரு குறிப்பிட்டப் பார்வையும், அதன் பாதிப் புன்னகையும் அதன் பார்வையாளர்களை வசியப்படுத்தின. ஸெட்டை சந்திக்க வந்த சுண்டெலிகள் ஸெட்டுடன் இருப்பதற்கும், அது பேசுவதைக் கேட்பதற்கும், தம்மை உற்சாகப்படுத்திக் கொள்வதற்குமே வந்தன. ஸெட் தம்மீது ஏன் இப்படிப்பட்ட ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது என்பதை அவற்றால் புரிந்து கொள்ள

www.t.me/tamilbooksworld

முடியவில்லை.
ஸெட் ஒரு வித்தியாசமான சுண்டெலி என்பது மட்டுமே அவற்றுக்கும் மற்ற சுண்டெலிகளுக்கும் தெரிந்த விஷயம். ஸெட் சீஸைப் பற்றிக் கவலைப்படவில்லை, புதிர்க்கட்டத்திற்குள் எவ்வாறு வளைய வருவது என்பதைக் கற்றுக் கொள்வதில் அக்கறை காட்டவில்லை. மற்ற சுண்டெலிகள் பின்பற்றிய அன்றாட வேலைகளையும் வழக்கங்களையும் பின்பற்ற முயற்சிக்கவில்லை. ஆனாலும், தமக்குத் தெரிந்த மற்ற அனைத்துச் சுண்டெலிகளைவிட ஸெட் தன் வாழ்க்கையை, அதாவது, ஒரு சுண்டெலியின் வாழ்க்கையை, அதிகமாக நேசித்தது என்பதை

www.t.me/tamilbooksworld

அச்சுண்டெலிகள் தெளிவாகத் தெரிந்திருந்தன.

அதன் விளைவாக, ஸெட்டைப் பற்றி அறிந்திருந்த அல்லது அதைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்த சுண்டெலிகள் ஸெட்டைப் போற்றின, ஸெட்டைக் கண்டு அஞ்சின. அவை ஸெட்டைப் போற்றியதற்குக் காரணம், அவை அதன் முன்னிலையில் இருந்தபோது, சிறப்பாகத் திகழ்வதற்கான உத்வேகத்தை அதனிடமிருந்து பெற்றுக் கொண்டிருந்ததுதான். அவை ஸெட்டைக் கண்டு அஞ்சியதற்குக் காரணம், எது முக்கியம் என்பது குறித்துத் தாம் கொண்டிருந்த நம்பிக்கைகள்மீது கேள்வி எழுப்பிய ஒரு சுண்டெலியால் மகிழ்ச்சியாகவும் இருக்க முடியும், அதுவும், மற்ற எல்லாச்

www.t.me/tamilbooksworld

சுண்டெலிகளைவிடவும் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பதற்கான வாழும் ஆதாரமாக ஸெட் விளங்கி வந்ததுதான்.

ஒருநாள், புதிர்க்கட்டடத்தின் ஒரு மூலையில் ஸெட் அமைதியாக உட்கார்ந்திருந்ததைப் பார்த்துவிட்டு, சில சுண்டெலிகள் அங்கு குழுமின. ஸெட் தன் கண்களை உயர்த்திப் பார்த்தபோது, அவை தன்னுடன் பேசுவதற்கு ஆர்வமாக இருந்ததை அது கவனித்தது. திட்டமிடப்படாத, திடீர்க் கலந்துரையாடல்கள் ஸெட்டிற்குப் பழக்கமாகிவிட்டிருந்தன. இப்படிப்பட்ட சந்திப்புகள் துவங்கிய விதம், தொடர்ந்து நடந்த விதம், நிறைவடைந்த விதம் அனைத்தும் அதற்குப் பழகிவிட்டிருந்தன. ஸெட் எந்தவிதமான

www.t.me/tamilbooksworld

ஆச்சரியங்களையும்
எதிர்பார்க்கவில்லை.
அதனால்தான் அவை ஆச்சரியங்கள்
என்று அழைக்கப்படுகின்றன போலும்!

www.t.me/tamilbooksworld

ஏன்

அங்கு குழுமியிருந்த சுண்டெலிகளில் ஓர் இளம் சுண்டெலி முதலில் பேசியது. "ஸெட், நானும் எனது நண்பர்களும் அந்த நல்லப் புத்தகத்தைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தோம். மாற்றத்தை ஏற்றுக் கொள்வதைக் கற்றுக் கொள்வது எப்படி என்பது பற்றியும், மாற்றம் 'ஏன்' நிகழ்கிறது என்பது பற்றிய பயனற்ற ஊகத்திற்கு அப்பால் செல்வது எப்படி என்பது பற்றியும் நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். மாற்றம் தவிர்க்க முடியாதது, கட்டுப்படுத்த முடியாதது என்று அப்புத்தகம் கூறுகிறது. நீங்கள் நிச்சயமாக அந்த நல்லப் புத்தகத்தைப் படித்திருப்பீர்கள். ஆனாலும், அப்புத்தகத்தைப் பற்றி நீங்கள் அவ்வளவாக அக்கறை

www.t.me/tamilbooksworld

கொள்வதில்லை என்று என் நண்பன் குறிப்பிட்டான். அதில் கூறப்பட்டுள்ளதை நீங்கள் உண்மையிலேயே நம்பவில்லை என்றும் அவன் கூறினான். நீங்கள் செய்வது தவறு என்று நான் நினைக்கிறேன். நீங்கள் ஏன் அப்படி நினைக்கிறீர்கள் என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நீங்கள் ஒரு தலைசிறந்த சிந்தனையாளர் என்றும், பெரும் புத்திசாலி என்றும் அனைவரும் கூறுகின்றனர். ஆனால் . . . நீங்கள் நினைப்பது தவறு என்று எனக்குத் தெரியும். நமது காலகட்டம் மட்டுமன்றி, அனைத்துக் காலகட்டங்களின் மாபெரும் உள்நோக்கை எப்படி உங்களால் நிராகரிக்க முடியும்? இது

www.t.me/tamilbooksworld

குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள் என்பதை அறிய நாங்கள் ஆவலாக இருக்கிறோம். இது உண்மையல்ல, சரிதானே? மாற்றம் தவிர்க்க முடியாதது என்பதை நீங்கள் மறுக்கிறீர்களா?"

ஸெட் புன்னகைத்தது. "நான் மறுக்கவில்லை. அந்த நல்லப் புத்தகம் கூறுவது சரிதான். மாற்றம் தவிர்க்க முடியாதது."

அந்த இளம் சுண்டெலி நிம்மதியடைந்தது வெளிப்படையாகத் தெரிந்தது. ஸெட்டிற்கு அது நன்றி தெரிவிக்க விரும்பியது. அது தனது நன்றியை வெளிப்படுத்தவிருந்த நேரத்தில், ஸெட் மீண்டும் பேசியது. "நான் மறுக்கவில்லை," என்று அது மீண்டும் வலியுறுத்தியது. "ஆனால்,

www.t.me/tamilbooksworld

அது முக்கியமல்ல என்றும், பொருத்தமற்றது என்றும் நான் நினைக்கிறேன்."

அந்த இளம் சுண்டெலி அதிர்ச்சி அடைந்தது. ஸெட் முதலிலேயே தன்னோடு ஒத்துப் போகாமல் இருந்திருக்கலாம் என்று அது நினைத்தது. உங்கள் சிந்தனை குறைபாடு கொண்டது என்பதைக் கேட்பதே கடினமான காரியம்; உங்கள் சிந்தனை அர்த்தமற்றது என்பதைக் கேட்பது அதைவிட மோசமானது.

"உங்களால் எப்படி அப்படிக் கூற முடியும்?" என்று அந்த இளம் சுண்டெலி கேள்வி எழுப்பியது.

அதற்கு ஸெட், "உன்னிடம் ஒரு கேள்வி கேட்பதிலிருந்து நான் துவங்குகிறேன். மாற்றம் தவிர்க்க முடியாதது என்று நீ

www.t.me/tamilbooksworld

என்னிடம் கூறுகிறாய். உன்னுடைய இந்த உள்நோக்கில் அப்படியென்ன முக்கியத்துவம் இருக்கிறது?" என்று கேட்டது.

"நாம் எப்படி வாழ வேண்டும் என்று அது நமக்குக் கூறுகிறது. எது முக்கியம் என்பதை அது விளக்குகிறது. எதை நம்மால் கட்டுப்படுத்த முடியும், எதைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை அது விளக்குவதால், நாம் கவனம் செலுத்துவதற்கு அது உதவுகிறது. நம்முடைய நேரத்தை எப்படிச் சிறப்பாகப் பயன்படுத்த வேண்டும் என்று அது நமக்கு எடுத்துரைக்கிறது."

அந்த இளம் சுண்டெலிக்குள் நம்பிக்கை துளிர்விடத் துவங்கியது.

"செயற்திறனுடன் இருப்பது எப்படி என்பதை அது நமக்குக் கற்றுக்

www.t.me/tamilbooksworld

கொடுக்கிறது. அதிக ஆற்றல்மிக்கவர்களாக இருப்பதற்கு அது நமக்கு உதவுகிறது. இவற்றையும், இவற்றுக்கு அதிகமானவற்றையும் அது நமக்குச் செய்கிறது."

"இது ஒரு மெச்சத்தக்கப் பட்டியல்தான்." என்று ஸெட் கூறியது.

அந்த இளம் சுண்டெலி அகமகிழ்ந்தது.

"நான் கூறும் இன்னொரு விஷயத்தையும் பொறுமையுடன் கேட்பாயா?" என்று ஸெட் கேட்டது.

"நிச்சயமாக," என்று அந்த இளம் சுண்டெலி பதிலளித்தது.

ஸெட் தொடர்ந்தது. "எது முக்கியம் என்பதை அந்த உள்நோக்கு விளக்குவதாக நீ கூறுகிறாய். எது முக்கியம் என்று நீ கற்றுக் கொண்டுள்ளாய்? எதன்மீது

www.t.me/tamilbooksworld

கவனத்தைக் குவிக்க வேண்டும் என்பதை அது உனக்குக் கற்றுக் கொடுத்துள்ளது? எந்த இலக்கைப் பின்தொடர்ந்து செல்வதில் நீ உனது நேரத்தைச் செலவிட வேண்டும் என்று அப்புத்தகம் பரிந்துரைக்கிறது? எதை சாதிப்பதில் உனக்கு அதிக செயற்திறன் உள்ளது? உன்னுடைய செயலாற்றல் எந்தத் தரத்தின் அடிப்படையில் அளவிடப்படுகிறது?"

அந்த இளம் சுண்டெலி ஸெட்டைப் பார்த்தது. ஸெட்டின் ஒவ்வொரு கேள்விக்கும் பதிலளிப்பதைப் பற்றி அது யோசித்தது. பதிலளிப்பதற்கு அது தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருந்தபோது ஒரு விஷயம் அதற்குப் பளிச்சிட்டது. ஒரே ஒரு விடைதான் இருக்கிறது. ஸெட்டின்

www.t.me/tamilbooksworld

கேள்விகள் ஒவ்வொன்றிற்கும் ஒரே விடைதான் உள்ளது. தனக்கு ஏற்பட்டிருந்த உணர்தலால் அதிர்ச்சியடைந்த அந்த இளம் சுண்டெலி வாயடைத்துப் போனது. அதற்குள் பல சுண்டெலிகள் அங்கு குழுமியிருந்தன. எல்லோருடைய பார்வையும் அந்த இளம் சுண்டெலியின்மீது இருந்தது. அது பதிலளிப்பதற்காக அனைத்துச் சுண்டெலிகளும் காத்துக் கொண்டிருந்தன. அவை நிலை கொள்ளாமல் தவிக்கத் துவங்கின.

"சீஸ்," என்று பதிலளித்த அந்த இளம் சுண்டெலி, "உங்களுடைய அனைத்துக் கேள்விகளுக்குமான விடை சீஸ்தான். சீஸ்தான் முக்கியம் என்று நான் கற்றுக் கொண்டுள்ளேன். அதன்மீதுதான்

www.t.me/tamilbooksworld

கவனம் செலுத்தப்பட்டாக வேண்டும் என்று எங்கள் அனைவருக்கும் கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அதைத் தேடுவதில்தான் எங்கள் நேரத்தை நாங்கள் செலவிடுகிறோம். சீஸைத் தேடி நாங்கள் எவ்வளவு விரைவாக ஓடுகிறோம் என்பதை மட்டுமே எங்களால் கட்டுப்படுத்த முடியும். எங்களில் அதிகச் செயற்திறன் கொண்டவர்கள் சீஸைக் கண்டுபிடிக்கிறோம். எங்களுடைய செயலாற்றல், அதாவது எங்களுடைய வெற்றி, சீஸின் அடிப்படையில்தான் அளவிடப்படுகிறது," என்று கூறியது. இறுதியாக அது ஒரே ஒரு வார்த்தையைக் கூறியது. அது ஸெட்டின் எந்தவொரு கேள்விக்குமான விடையல்ல. தன்னைத் திக்குமுக்காடச்

www.t.me/tamilbooksworld

செய்த, தனக்கு ஏற்பட்ட உணர்தலுக்கு அதனிடமிருந்து வெளிப்பட்ட பதில்தான் அது.

"ஏன்," என்று வருத்தத்துடன் அது கூறியது. அந்த 'ஏன்' ஒரு கேள்வியல்ல. அது ஒரு விடை, ஓர் இறுதியான தீர்மானம்.

ஸெட் இரக்கத்துடன் புன்னகைத்தது. அதற்குள், அங்கிருந்த மற்றச் சுண்டெலிகள் கோபம் கொண்டன. அந்த இளம் சுண்டெலி தம்மை வஞ்சித்துவிட்டதாக அவை நினைத்தன.

"இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?" என்று ஒரு வயதான சுண்டெலி ஸெட்டைப் பார்த்துக் கத்தியது. "இந்த விவாதத்தின் நோக்கம் என்ன? எது பொருத்தமானது என்று

www.t.me/tamilbooksworld

தீர்மானிப்பதற்கு நீ யார்? மாற்றம் தவிர்க்க முடியாதது, கட்டுப்படுத்த முடியாதது என்று நீ ஒப்புக் கொண்டாய் . . ."

ஸ்னிஃப் இடைமறித்து, "நான் அதை ஒத்துக் கொள்ளவில்லை. மாற்றம் கட்டுப்படுத்த முடியாதது என்பதை நான் ஒருபோதும் ஒப்புக் கொள்ளவில்லை," என்று கூறியது.

"அதை நீ ஒப்புக் கொள்ள மறுத்தால், நீ ஒரு முட்டாள்," என்று அந்த வயதான சுண்டெலி பிதற்றியது.

"இருக்கலாம்."

அந்த வயதான சுண்டெலி கோபத்துடன், "இதைவிட வேறு எது முக்கியமானதாக இருக்க முடியும்? ஒரு சுண்டெலிக்கு இதைவிட வேறு எது பொருத்தமானதாக இருக்க முடியும்?

www.t.me/tamilbooksworld

எங்களுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய விஷயத்தை நாங்கள் பின்தொடர்ந்து செல்வதில் உனக்கு விருப்பமில்லையா?" என்று கேட்டது. ஸெட் தொடர்ந்து அந்த இளம் சுண்டெலியைப் பார்த்தது. அந்தச் சுண்டெலி தன் கூட்டத்தினரிடமிருந்து விலகி, ஸெட்டின் அருகே வந்துவிட்டிருந்தது. ஸெட் அதைப் பரிவுடன் பார்த்து, அந்த வயதான சுண்டெலிக்கு பதிலளித்துக் கொண்டு இருந்தது. ஆனால் அது உண்மையில் அந்த இளம் சுண்டெலியிடம்தான் பேசிக் கொண்டிருந்தது.

"நீங்கள் மகிழ்ச்சியைப் பின்தொடர்ந்து செல்வதில் எனக்கு விருப்பமில்லை, நீங்கள் உண்மையிலேயே மகிழ்ச்சியைக் கண்டுபிடிக்க வேண்டும்

www.t.me/tamilbooksworld

என்று நான் விரும்புகிறேன்.
மகிழ்ச்சிக்கான தேடல் உங்களை மகிழ்ச்சிப்படுத்தவில்லை என்றால், மகிழ்ச்சியை அடைவது உங்களுக்கு சாத்தியப்படுமா?"
அந்த இளம் சுண்டெலி வருத்தத்துடன், "இல்லை. புதிர்க்கட்டத்தில் நிச்சயமாக அது சாத்தியமில்லை. புதிர்க்கட்டத்தில் தேடல் மட்டுமே உள்ளது. அதற்கு முடிவே இல்லை. நீங்கள் எவ்வளவு சீஸை சேகரித்தாலும் சரி, நீங்கள் தொடர்ந்து ஓடிக் கொண்டே இருக்க வேண்டும். மகிழ்ச்சியை உங்களால் இங்கு கண்டுபிடிக்க முடியாது. அதிகமான சீஸை மட்டுமே உங்களால் கண்டுபிடிக்க முடியும்," என்று பதிலளித்தது.
கூட்டம் நம்பிக்கை இழந்தது. அந்த

www.t.me/tamilbooksworld

வயதான சுண்டெலி தாக்கும் விதத்தில் பேசியது.

"இது கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது, ஆனால் நடைமுறைக்கு உதவாது. ஒரு சுண்டெலி தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள புதிர்க்கட்டத்தை அப்படியே ஏற்றுக் கொண்டாக வேண்டும். இந்தப் புதிர்க்கட்டத்திற்குள் சிறப்பாக எப்படி வளைய வருவது என்பதைப் பற்றி மட்டும்தான் ஒரு சுண்டெலி யோசிக்க வேண்டும். சீஸ் நகரும்போது, அதை மீண்டும் எப்படிக் கண்டுபிடிப்பது என்பதைப் பற்றி மட்டுமே அது சிந்திக்க வேண்டும். அதற்குப் பதிலாக வேறு எதைப் பற்றி சிந்திக்க வேண்டும் என்று நீ நினைக்கிறாய்?"

ஸெட் அந்த வயதான சுண்டெலியைப்

www.t.me/tamilbooksworld

பார்த்துப் புன்னகைத்துவிட்டுப் பிறகு பதிலளித்தது.

"சிந்தித்துப் பார்ப்பதற்கு சுவாரசியமான, முக்கியமான விஷயங்கள் ஏராளமாக இருக்கின்றன. மாற்றம் ஏன் தவிர்க்க முடியாதது என்பதைப் பற்றி நீங்கள் எப்போதாவது யோசித்தது உண்டா? புதிர்க்கட்டம் ஏன் இப்படி இருக்கிறது என்பதைப் பற்றியும், அது எதற்குப் பயன்படுகிறது என்பதைப் பற்றியும் நீங்கள் எப்போதாவது சிந்தித்தது உண்டா? சுண்டெலிகள் ஏன் சீஸைத் தேடுவதில் தங்கள் ஒட்டுமொத்த வாழ்நாளையும் செலவிடுகின்றன என்று நீங்கள் உங்களைக் கேட்டுக் கொண்டதுண்டா? சீஸ் காணாமல் போனதைக் கண்டவுடன், யார் என் சீஸை

www.t.me/tamilbooksworld

நகர்த்தியது என்று நீங்கள் எப்போதேனும் வியந்தது உண்டா?” என்று ஸெட் கேட்டது.

இந்தக் கடைசி வாக்கியம் அங்கிருந்த அனைவரையும் தாக்கியது.

கவலையோடு இருந்த அந்த அனைத்துச் சுண்டெலிகளும் எதிர்க்குரல் எழுப்பிக் கத்தின:

"இது காலவிரயம்."

"நீ ஏன் இப்படிப்பட்டக் கேள்விகளைக் கேட்கிறாய்?"

"இது அறிவுக்குப் புறம்பான பேச்சு."

"நகைப்புக்கிடமான பேச்சு."

"குழந்தைத்தனமானது."

"நடைமுறைக்குச் சாத்தியமற்றது."

"சீஸை நகர்த்தியது யார் என்பதை எவராலும் கண்டுபிடிக்க முடியாது."

"அந்தக் கேள்விக்கு விடையே

www.t.me/tamilbooksworld

கிடையாது."
கூட்டத்தில் ஆரவாரம் அடங்கி, ஒரு சிறு அமைதி நிலவியது.
பிறகு, அக்கணத்தின் அமைதியைக் குலைக்கும் வகையில், கூட்டத்தின் பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது. அக்குரல் சக்தி வாய்ந்ததாகவும், உறுதியானதாகவும், இரக்கமற்றதாகவும் இருந்தது - கிட்டத்தட்ட அக்கறையற்றதாகவும் இருந்தது. ஆனால் வார்த்தைகள் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் பேசப்பட்டன.
"சீஸை யார் நகர்த்தினார்கள் என்று எனக்குத் தெரியும். அதை ஏன் நகர்த்தினார்கள் என்பதும் எனக்குத் தெரியும்," என்று அது கூறியது.

www.t.me/tamilbooksworld

சாத்தியமற்ற விஷயம்

கூட்டத்திலிருந்த சுண்டெலிகள் திகைத்து நின்றன. சாத்தியமற்ற அந்த வார்த்தைகளைப் பேசியது யார் என்பதைப் பார்ப்பதற்காக அவை திரும்பின. அந்தக் கூற்றுக்கு எவரேனும் உரிமை கோருவார்களா என்பதைப் பார்ப்பதற்காக அவை திரும்பின. அங்கு மேக்ஸ் நின்று கொண்டிருந்ததை அச்சுண்டெலிகள் பார்த்தன. கிட்டத்தட்ட ஒரு வருட காலமாக எவருமே மேக்ஸைப் பார்த்திருக்கவில்லை, மேக்ஸ் பெருமகிழ்ச்சியில் இருந்தது.

அது கூட்டத்தினரின் ஊடாகப் பார்க்காமல், அவற்றைத் தாண்டிப் பார்த்தது. அதன் பார்வை ஸெட்டின்மீது நிலைத்திருந்தது. கூட்டத்தினரை மேக்ஸ் கண்டுகொள்ளவில்லை.

www.t.me/tamilbooksworld

"சீஸை நகர்த்தியது யார் என்று எனக்குத் தெரியும். அதைப் பற்றி நான் உனக்குக் கூறுகிறேன்," என்று கூறிய மேக்ஸ், ஸெட்டிடம் மட்டுமே பேசிக் கொண்டிருந்தது.

கூட்டம் அமைதியாக இருந்தது. இந்தத் திடீர்ப் பாய்ச்சலை ஒரு பைத்தியக்காரனின் பிதற்றல் என்று அச்சுண்டெலிகள் விரைவில் ஒதுக்கித் தள்ளியிருக்கும், ஆனால் மேக்ஸின் கண்களில் இருந்த தீர்க்கம் அப்படிப்பட்ட ஓர் எண்ணத்தை ஒதுக்கித் தள்ளியது. மேக்ஸ் மிகவும் தீவிரமாக இருந்ததை அங்கிருந்த ஒவ்வொரு சுண்டெலியும் தனித்தனியாக நன்றாக அறிந்திருந்தன. ஒரு குழுவாக, இந்த சாத்தியக்கூற்றைக் கருத்தில் கொள்ள

www.t.me/tamilbooksworld

அவை தயாராக இல்லை. என்ன சிந்திக்க வேண்டும் என்று அவற்றுக்குத் தெரியவில்லை. அவை சிந்திக்க விரும்பவில்லை. தம் கூட்டத்தில் இருந்த வேறு ஏதேனும் ஒரு சுண்டெலி தம் அனைவருடைய சார்பிலும் சிந்திப்பதற்காகவும், இச்சூழ்நிலையில் தாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை அது தமக்காக முடிவு செய்வதற்காகவும் அவை ஒவ்வொன்றும் காத்துக் கொண்டிருந்தன. இறுதியில், அந்த வயதான சுண்டெலி பேசியது.

"என்னவோர் அற்புதமான அபத்தம்! இப்படிப்பட்ட வீரபிரதாபக் கதைகளைக் கேட்பதற்கு எங்களுக்கு நேரமில்லை. நாங்கள் இங்கு ஒரு தீவிரமான விவாதத்தில் ஈடுபட்டிருக்கிறோம்.

www.t.me/tamilbooksworld

இவ்வாறு குறுக்கிடுவது மரியாதையற்றச் செயல் என்பது உனக்குத் தெரியவில்லையா? உன்னுடைய அற்பத்தனமான வார்த்தைகளுக்கு நாங்கள் இரையாகப் போவதில்லை. நண்பர்களே, வாருங்கள். இந்த விவாதம் நம்மை எங்கும் கூட்டிச் செல்லப் போவதில்லை. நீண்ட நேரமாகிவிட்டது. எனக்கு வேறு முக்கியமான வேலைகள் இருக்கின்றன."

அந்த வயதான சுண்டெலி மிகச் சிறப்பாகப் பேசியது, குறிப்பாகத் தன்னுடைய சொந்த வார்த்தைகள் குறித்து அதுவே நிச்சயமின்றி இருந்ததைக் கருத்தில் கொள்ளும்போது அந்தச் சுண்டெலியின் முயற்சிக்கு மற்ற

www.t.me/tamilbooksworld

சுண்டெலிகள் நன்றி செலுத்தின. கூட்டம் மெதுவாகக் கலைந்தது. தாம் அங்கிருந்து கலைந்து செல்ல வேண்டுமா வேண்டாமா என்பது பற்றிய சந்தேகங்கள் அவற்றின் மனத்தைச் சூழ்ந்திருந்தன. ஆனால் அந்த சந்தேகங்கள் வெகுவிரைவில் மறைந்துவிடும். ஒரு வாரத்தில், அந்தச் சுண்டெலிகள் அந்த ஒட்டுமொத்த சந்திப்பையும் மறந்துவிட்டிருக்கும், அந்த இளம் சுண்டெலியைத் தவிர.

கூட்டம் கலைந்து சென்ற பிறகு ஸெட் மட்டுமே அங்கு இருந்தது. அது அங்கிருந்து அசையக்கூட இல்லை. மேக்ஸ் ஸெட்டை அணுகியது.

"நான் உன்னுடன் பேச விரும்புகிறேன்," என்று மேக்ஸ் கூறியது.

"நீ கூறுவதை நிச்சயமாக நான் கேட்க

www.t.me/tamilbooksworld

விரும்புகிறேன்," என்று ஸெட் பதிலளித்தது.
"கடந்த ஒரு வருடகாலம் மிகவும் சுவாரசியமான ஒன்றாக இருந்தது. பல விஷயங்கள் நிகழ்ந்துள்ளன. நான் ஏராளமானவற்றைப் பார்த்துவிட்டேன். ஏராளமானவற்றைக் கற்றறிந்து உள்ளேன், ஏராளமானவற்றைச் செய்திருக்கிறேன். ஸெட், நான் கூறவிருக்கும் விஷயத்தையும், அதன் முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்ளக்கூடிய முதல் சுண்டெலி நீதான். நான் கூறுவதை நீ காதுகொடுத்துக் கேட்பாயா?"
"நிச்சயமாக."
மேக்ஸ் ஸெட்டை நோக்கி நடந்து சென்று, அதன் அருகில் அமர்ந்தது. ஸெட் மிகவும் இளமையாக இருந்ததை

www.t.me/tamilbooksworld

அது கண்டது. ஸெட்டைப் பற்றி அது கேள்விப்பட்டிருந்தது. ஸெட் வயதான சுண்டெலியாக இருக்கும் என்று அது எதிர்பார்த்திருந்தது.

"என்னுடைய பயணத்தின் ஆரம்பத்திலிருந்து நான் துவக்குகிறேன். நான் உன்னிடம் கூறவிருக்கும் அனைத்தும் உண்மை என்பதை தயவு செய்து நம்பு . . . சாத்தியமற்ற விஷயத்தையும்கூட."

"எனக்குத் தெரியும்," என்று ஸெட் கூறியது.

மேக்ஸ் தன் கதையைக் கூறத் துவங்கியது.

www.t.me/tamilbooksworld

மேலே

"ஒரு வருடத்திற்கு முன்பு இதே நாள், எனக்கு நானே ஒரு வாக்குக் கொடுத்துக் கொண்டேன். அது ஒரு தீர்மானம். நான் என் வாழ்நாளில் மேற்கொண்ட மிகவும் கடினமான தீர்மானம் அதுதான். புதிர்க்கட்டம் ஏன் இப்படி வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதையும், சீஸ் ஏன் நகர்த்தப்பட்டுள்ளது என்பதையும், யார் அதை நகர்த்தினார்கள் என்பதையும் கண்டறிவதென்று நான் தீர்மானித்தேன். அந்த நேரத்தில், இவ்விஷயங்களை என்னால் கண்டறிய முடியும் என்று நம்புவதற்கு என்னிடம் எந்தக் காரணமும் இருக்கவில்லை. அவற்றைக் கண்டறிய முயற்சிப்பதில் என் வாழ்க்கையைச் செலவிட வேண்டும் என்பதை மட்டுமே

www.t.me/tamilbooksworld

நான் அறிந்திருந்தேன்.
"பல வாரங்களாக, மற்ற சுண்டெலிகளுடன் பேசுவதில் நான் என் நேரத்தைச் செலவிட்டேன், குறிப்பாக வயதான சுண்டெலிகளுடன். என்னுடைய கேள்விகளுக்கான விடைகள் அவர்களுக்குத் தெரியுமா என்று அவர்கள் ஒவ்வொருவரிடமும் நான் கேட்டேன். யாருக்கும் விடைகள் தெரிந்திருக்கவில்லை. நான் ஏன் அக்கேள்விகளைக் கேட்கிறேன் என்பதை அவர்களில் ஒருவரால்கூடப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்களைப் பொறுத்தவரை, தெரிந்து கொள்வதற்கான ஆர்வம் ஓர் இளம் சுண்டெலியிடம் இருப்பது இயற்கையானது என்றாலும், அதைத் திருப்திப்படுத்துவதற்கான திறன்

www.t.me/tamilbooksworld

சுண்டெலிகளுக்கு இருக்கிறது என்று அதற்கு அர்த்தமில்லை. அவர்கள் என்னிடம் கூறியது இதுதான். ஏன் என்று துவங்கும் கேள்விகள் அனைத்திற்கும் விடைகள் இருக்க வேண்டிய அவசியமில்லை. அப்படியே இருந்தாலும்கூட, சுண்டெலிகள் அவற்றைத் தெரிந்திருக்க வேண்டியதில்லை. கேள்வி கேட்பது சுண்டெலிகளின் வேலையல்ல. ஏற்றுக் கொள்வது மட்டுமே அவற்றின் வேலை. ஆனால், ஸெட், என்னால் அப்படி ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

"இறுதியில், மற்ற பிற இளம் சுண்டெலிகள் வந்த அதே முடிவுக்கு நானும் வந்தேன். புதிர்க்கட்டத்தில் இருக்கும் சுண்டெலியால் 'ஏன்' என்பதை ஒருபோதும் புரிந்து கொள்ள

www.t.me/tamilbooksworld

முடியாது என்பதுதான் அது. ஆனால் பிற சுண்டெலிகள் அதற்குப் பிறகு 'ஏன்' என்று யோசிப்பதை நிறுத்தியதைப்போல் நான் நிறுத்திவிடவில்லை.

"மாறாக, ஒரு புதிர்க்கட்டத்திற்கு உள்ளே ஒரு சுண்டெலியால் ஓரளவு மட்டுமே அறிந்து கொள்ள முடியும், ஓரளவு மட்டுமே புரிந்து கொள்ள முடியும் என்பதை நான் உணர்ந்ததால், புதிர்க்கட்டத்தைவிட்டு வெளியேறுவதென்று நான் தீர்மானித்தேன்.

"முதலில், அப்படிப்பட்ட யோசனையே முட்டாள்தனமான ஒன்றாக இருந்தது. புதிர்க்கட்டத்தைவிட்டு வெளியேறுவது என்பதற்கு என்ன அர்த்தம்? அப்படி ஏதேனும் ஒன்று இருக்கிறதா? ஆனால்,

www.t.me/tamilbooksworld

வேறொரு தீர்மானத்திற்கு வர நான் முயற்சித்தும்கூட, என்னுடைய பேரார்வம் என்னை இந்த முடிவுக்கு இழுத்து வந்தது. எனவே, இது எப்படி நிகழக்கூடும் என்று நான் ஆய்வு செய்யத் துவங்கினேன்.

"புதிர்க்கட்டடங்களுக்கு எல்லைச் சுவர்கள் இருக்கின்றன என்பதையும், அந்தச் சுவர்களுக்கு அப்பால் வழி எதுவும் கிடையாது என்பதையும் நான் ஏற்கனவே அறிந்திருந்தேன். அந்தச் சுவர்களை உடைத்து ஒரு பாதையை உண்டாக்குவதற்கான வழிகளைத் தேட நான் முயற்சித்தேன். அது சாத்தியமற்றதாக இருந்தது. நிலத்திற்குக் கீழே ஏதேனும் ஓர் உலகம் இருக்கிறதா என்று யோசித்தபடி நான் தரையைத் தோண்டி ஒரு வழியைக்

www.t.me/tamilbooksworld

காண முயற்சித்தேன். மீண்டும் நான் தோற்றேன்.

"புதிர்க்கட்டத்தைவிட்டு வெளியேறுவதற்கான வழி மேலேதான் இருக்கிறது என்ற முடிவுக்கு நான் வந்தேன்.

"பெரும்பாலான சுண்டெலிகள் நேராகவும், வலது பக்கமும், இடது பக்கமும், கீழேயும் பார்ப்பதைத் தவிர வேறு எந்தத் திசையிலும் ஒருபோதும் பார்ப்பதில்லை. அது மட்டுமல்ல, சாப்பிட்டு முடித்தப் பிறகு சிதறிக் கிடக்கின்ற சீஸ் துண்டுகளைக் கண்டுபிடிப்பதற்கு மட்டுமே நாம் கீழே பார்க்கின்றோம். நாம் சிறு வயதினராக இருந்தபோது, கீழேயிருந்து கழுத்தை நீட்டி வெளிச்சம் வரும் திசையைப் பார்த்தோம். ஆனால், அதனால் எந்தப்

www.t.me/tamilbooksworld

பிரயோஜனமும் இல்லை என்பதை நாம் விரைவில் கண்டறிந்ததால், அவ்வாறு பார்ப்பதை நிறுத்திவிட்டோம். "இன்னொரு முறை அவ்வாறு பார்ப்பது ஏதேனும் பலனளிக்கும் என்று நான் தீர்மானித்தேன். எல்லோரும் எதிர்பார்ப்பதைப் போலவே, பார்ப்பதற்கு அங்கு எதுவும் இருக்கவில்லை. சுவர்கள் மேல்நோக்கி முடிவற்று நீடித்திருந்தன. ஆனால் நான் என் முயற்சியைக் கைவிடவில்லை. புதிர்க்கட்டத்தின் ஒவ்வொரு புள்ளியிலிருந்தும் நான் மேலே பார்த்தேன். பல நாட்களாக நான் இதைச் செய்தேன். பிறகு எனக்கு ஒரு யோசனை உதித்தது. நான் ஏதோ ஒன்றைக் கண்டறிந்தேன்.

"ஒரு பாதையில் நின்று கொண்டு,

www.t.me/tamilbooksworld

அங்கிருக்கும் சுவரின் நிழலின் நீளத்தை அளந்து, பிறகு அதற்கு இணையான இன்னொரு பாதையில் நின்று, அதே திசையிலிருந்து அந்தப் பாதையின் சுவரின் நிழலை அளந்தால், அந்த நிழல்களின் நீளங்கள் சற்று வேறுபடுகின்றன என்பதை நான் கவனித்தேன். வெளிச்சம் முதல் சுவரின் திசையிலிருந்து வந்தது என்பதையும், சுவர்கள் முடிவற்றவையல்ல என்பதையும் நான் கண்டறிந்தேன். திகைப்பூட்டும் விஷயம் இதில் எதுவுமில்லை. ஆனால், பிரச்சனை குறித்துப் பல நாட்கள் நான் சிந்தித்தப் பிறகு, ஒவ்வொரு பாதையிலும் வெளிச்சம் எந்தக் கோணங்களில் இருந்து நுழைந்து கொண்டிருந்தது என்பதையும், இரண்டு

www.t.me/tamilbooksworld

பாதைகளின் சுவர்களுக்கு இடையேயான தூரத்தையும், அந்தச் சுவர்களில் ஒரு சுவருக்கும், அதற்கு இணையான, ஆனால் நிழலை ஏற்படுத்தாத இன்னொரு சுவருக்கும் இடையேயான தூரத்தையும் என்னால் கணக்கிட முடியும் என்பதையும் நான் கண்டறிந்தேன். இது சுலபமாக இருக்கவில்லை. ஏனெனில், ஒன்றுக்கொன்று இணையாக மூன்று சுவர்கள் புதிர்க்கட்டத்தில் வெகுசில இடங்களிலேயே இருந்தன. அதிலும், அவற்றில் ஒரு சுவரின் இரண்டு பக்கங்களிலும் நிழல் உருவாகாத வண்ணம் அமைந்திருந்த இடங்கள் வெகு குறைவாகவே இருந்தன. ஆனால், அந்த இடத்தைக் கண்டுபிடித்து, சில கூடுதலான

www.t.me/tamilbooksworld

அறிவார்ந்த அனுமானங்களை மேற்கொண்டு, கோணங்களைக் கணக்கிட்டப் பிறகு, சுவர்களின் உயரத்தை என்னால் தீர்மானிக்க முடிந்தது.

"சுவர்களின் உயரத்தை நான் கணக்கிட்டுக் கண்டறிந்தேன். உயரத்தை அடைவதற்கு நான்கு சுண்டெலிகள் ஒன்றின்மேல் ஒன்று நின்றாக வேண்டும். நான் பிற கண்டெலிகளை நியமித்தேன். ஆனால், தனக்கு மேலே ஒரே ஒரு சுண்டெலியை மட்டுமே தாங்கக்கூடிய வலிமை அவற்றுக்கு இருந்ததை விரைவில் நான் கண்டறிந்தேன். அது ஒரு பிரச்சனையாக இருந்தது.

"பிறகு நான் என்னால் கண்டுபிடிக்க முடிந்த சீஸையெல்லாம் சேகரிக்கத்

www.t.me/tamilbooksworld

துவங்கினேன். அவற்றை ஒரு குவியலாக அடுக்கி வைத்தேன். ஆனால் அதனால் எந்தப் பயனும் ஏற்படவில்லை. என்னுடைய எடையை அக்குவியலால் தாங்க முடியவில்லை. அதன்மீது நான் ஏற முயற்சித்த ஒவ்வொரு முறையும், நான் அக்குவியலுக்குள் சரிந்து விழுந்தேன். என் உடல் முழுவதையும் அந்த சீஸ் துண்டுகள் போர்த்தியிருந்தன.

"என்னுடைய நகங்களைப் பயன்படுத்திச் சுவர்களில் ஏறவும் நான் முயற்சித்தேன். மீண்டும் நான் தோல்வியை சந்தித்தேன்.

"வேறு யோசனைகள் எதுவுமின்றித் தத்தளித்துக் கொண்டிருந்த நேரத்தில், நான் அதுவரை சந்தித்திராத ஒரு சுண்டெலியை எதிர்கொண்டேன்.

www.t.me/tamilbooksworld

எந்தவிதத்திலும் அது வேறு எந்தவொரு சுண்டெலியைப் போலவும் இருக்கவில்லை. என்னுடைய பிரச்சனையைத் தீர்க்கக்கூடிய தனித்துவமான திறனைப் பெற்றிருந்த ஒரு சுண்டெலி அது என்பதுபோல் தோன்றியது.
"அந்தச் சுண்டெலியின் பெயர் பிக்."

www.t.me/tamilbooksworld

பிக்

அது அதன் உண்மையான பெயரல்ல, ஆனால் எல்லாச் சுண்டெலிகளும் அதை 'பிக்' என்றுதான் அழைத்தன. அதற்கான காரணம் மிகவும் வெளிப்படையானது: அந்தச் சுண்டெலி பெரிதாக இருந்தது. புதிர்க்கட்டத்திலேயே மிகப் பெரிய சுண்டெலி அதுதான் என்று கூற முடியாது. அறிவியலறிஞர்களால் மரபுரீதியான தூண்டுதல் முறையில் பெரிதாக்கப்பட்டிருந்த வேறு சில சுண்டெலிகளைப்போல் அது இருக்கவில்லை. ஆனால் அந்தப் புதிர்க்கட்டத்திலேயே அதிக வலிமை படைத்தச் சுண்டெலி அதுதான். அந்தச் சுண்டெலிக்கு அங்கு போட்டியே இருக்கவில்லை. எந்தவொரு சுண்டெலியாலும் கற்பனை செய்து

www.t.me/tamilbooksworld

பார்க்க முடியாத அளவுக்கு அது வலிமையாக இருந்தது. அது பெரிதாக இருந்ததற்குக் காரணம், பெரிதாக இருப்பதை அது விரும்பியதும், அது குறித்து நடவடிக்கை எடுத்ததும்தான். ஒரு சுண்டெலி உடற்பயிற்சி செய்வதைப் பார்ப்பது அரிது. புதிர்க்கட்டத்தில் அது பற்றி யாரும் கேள்விப்பட்டிருக்கவே இல்லை. அதற்கு எந்தக் காரணமும் இல்லை. ஏனெனில், சீஸைக் கண்டுபிடிப்பது வலிமைக்கான ஒரு சோதனை அல்ல. எது எப்படியிருந்தாலும், பிக் அவ்வளவு அதிகமாக சாப்பிடவில்லை. தான் கண்டுபிடிக்கும் சீஸ் அனைத்தையும் உண்ணுவது ஒரு சுண்டெலியின் இயல்பாக இருந்தாலும், தன் வளர்ச்சியை ஆதரிக்கப் போதுமான

www.t.me/tamilbooksworld

அளவு மட்டுமே பிக் சாப்பிட்டது. பிக் சாப்பிட்டு முடித்தப் பிறகு, பெரும்பாலான சமயங்களில் அந்த இடத்தில் சீஸ் மிச்சமிருந்தது. இது மற்ற சுண்டெலிகளுக்கு வினோதமாகத் தோன்றியது. அவற்றைப் பொறுத்தவரை, எல்லா சீஸும் காலியானபோது மட்டுமே விருந்து முடிந்தது என்று அர்த்தம்.

மற்ற கண்டெலிகளைப் போலன்றி, பிக் ஒருபோதும் உணவைத் தேடிச் சென்றதில்லை. அதற்கான அவசியம் அதற்கு ஒருபோதும் ஏற்பட்டதில்லை. சாப்பிடச் சென்றபோது, சீஸ் அங்கிருந்து நகர்த்தப்பட்டிருப்பதைக் கண்டால், பிக் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. புதிர்க்கட்டம் நெடுகிலும் ஓடுவது அதன் தினசரி

www.t.me/tamilbooksworld

உடற்பயிற்சியின் ஒரு பகுதியாக இருந்ததால், அடிக்கடி புதிய சீஸ் குவியல்கள் அதன் பார்வையில் பட்டன. எப்போதாவது சீஸை அதனால் கண்டுபிடிக்க முடியாவிட்டால், அது வெறுமனே சாப்பிடாமல் இருந்துவிடும்.
"இன்று நீ சீஸைத் தேடிச் சென்றால் என்ன?" என்று அதன் நண்பர்கள் அதனிடம் கேட்பார்கள்.
அதற்கு பிக், "நான் விளையாடுவது அந்த விளையாட்டல்ல," என்று பதிலளிக்கும்.
பிறகு, அவை பிக்கை விட்டுவிட்டு சீஸைத் தேடச் சென்றுவிடும்.
அப்படியானால் தசைகளை உருவாக்குவதற்கு ஏன் இவ்வளவு கடினமாக உழைக்க வேண்டும்?
உடற்பயிற்சி செய்வதில் ஏன் அதிக

www.t.me/tamilbooksworld

நேரத்தைச் செலவிட வேண்டும்? இவற்றைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்? பிக்கின் குறிக்கோள் என்ன? இக்கேள்விகள் பிக்கிடம் அதன் வாழ்நாள் முழுவதும் கேட்கப்பட்டு வந்துள்ளன.

வழக்கமாக, பிக் இதற்கு விடையளிப்பதில்லை. அப்படியே தப்பித் தவறி விடையளித்தாலும், அது வெறுமனே, "நான்தான் என் குறிக்கோள்," என்று மட்டும் கூறும். அதற்கு என்ன அர்த்தம் என்று எந்தச் சுண்டெலியும் பிக்கிடம் கேட்டதில்லை. பிக் திருப்தியாக வாழ்ந்து கொண்டிருந்தது. தன்னை எது மகிழ்ச்சிப்படுத்தியது என்பதை அது கண்டுகொண்டது. அதை மட்டுமே அது செய்தது. மற்ற சுண்டெலிகளுக்கு அது

www.t.me/tamilbooksworld

புரிந்ததா என்பது பற்றி பிக் கவலைப்படவில்லை. தனது தேடல் மற்றவர்களுக்கு மகிழ்ச்சியைத் தராது என்பது பற்றி பிக் கவலைப்படவில்லை. அந்தத் தேடல் பிக்கிற்கு மட்டுமானது. மற்ற சுண்டெலிகளுக்கு, அது வேறொரு தேடலாக இருக்கும். பிக் அதைப் பற்றியும் கவலைப்படவில்லை. தான் ஒரு புதிர்க்கட்டத்தில் இருந்ததை பிக் கவனிக்கவில்லை. பிக்கைப் பொறுத்தவரை, அது பொருத்தமற்றது. பிக்கின்மீது எவ்விதமான கட்டுப்பாடுகளையும் அது விதிக்கவில்லை, புதிர்க்கட்டத்தில் அந்தச் சுண்டெலிக்குப் பல நண்பர்கள் இருந்தனர். அவற்றோடு விளையாடுவதற்கு அதற்கு ஏகப்பட்ட

www.t.me/tamilbooksworld

நேரமும் இருந்தது. மிக முக்கியமாக, அமைதியையும் மகிழ்ச்சியையும் கண்டுபிடிப்பது என்ற தன்னுடைய ஆழ்விருப்பத்தைப் பின்தொடர்ந்து செல்வதற்குப் போதுமான வாய்ப்புகளை அதன் சூழல் அதற்கு வழங்கியது. எனவே, புதிர்க்கட்டத்தைக் கருத்தில் எடுத்துக் கொள்வதைப் பற்றி அது அக்கறை காட்டவில்லை.

ஆனால் ஒருநாள் . , ,

தன் வாழ்வில் ஏதோ ஒன்று மாறியிருந்ததை பிக் உணர்ந்தது. முதன்முறையாக, புதிர்க்கட்டத்தைத் தான் கவனித்ததை அது கண்டது. நாம் அந்தக் கதையைப் பிறகு பார்க்கலாம். அது நடந்ததற்கு சில நாட்களுக்கு முன்பு பிக் மேக்ஸை சந்தித்தது. மேக்ஸ் கூறிக் கொண்டிருந்த கதையில்

www.t.me/tamilbooksworld

நாம் இந்த இடத்தில்தான் இருக்கிறோம்.

www.t.me/tamilbooksworld

வெளியே
மேக்ஸ் தன் கதையைத் தொடர்ந்தது. "பிக் ஒருநாள் என்னிடம் வந்து, நான் ஏதோ கிறுக்குத்தனமான ஒன்றை முயற்சித்துக் கொண்டிருந்ததைத் தான் கேள்விப்பட்டதாக என்னிடம் கூறியது. 'கிறுக்குத்தனமான' என்ற வார்த்தையைக் கூறியபோது, அந்த வார்த்தை குறித்துத் தனக்கு அக்கறையில்லை என்பதை வலியுறுத்தும் விதமாக பிக் என்னைப் பார்த்துப் புன்னகைத்தது. பிக்கை எனக்குத் தெரியாது. அதைப் பற்றி நான் ஒருபோதும் கேள்விப்பட்டிருக்கவில்லை. ஆனால் அதன் தோற்றம் எனக்கு அதிர்ச்சியளித்தது. அத்தகைய வலிமையான சுண்டெலியை நான் அதற்கு முன்பு ஒருபோதும்

www.t.me/tamilbooksworld

பார்த்திருக்கவில்லை. தன் பெயர் பிக் என்று அது கூறியபோது என்னால் புன்னகைக்காமல் இருக்க முடியவில்லை.

"சாத்தியமற்ற ஓர் இலக்கைக் குறிவைத்து அதன் பின்னால் சென்று கொண்டிருந்த 'மேக்ஸ்' என்ற சுண்டெலியைப் பற்றி வேறு சில சுண்டெலிகள் பேசிக் கொண்டிருந்ததைத் தான் செவிமடுத்ததாக பிக் என்னிடம் கூறியது. நான் என் குழந்தைத்தனத்தைக் கைவிட்டுவிட்டு, சீஸைத் தேடிச் செல்ல வேண்டும் என்று அவற்றில் ஒரு சுண்டெலி கூறியதைக் கேட்டபோது பிக்கிற்கு அதில் ஆர்வம் ஏற்பட்டது. எனக்கு நானே சிருஷ்டித்துக் கொண்ட ஒரு சிறிய உலகில் நான்

www.t.me/tamilbooksworld

வாழ்ந்து கொண்டிருந்ததாகவும், என்னுடைய சொந்த விதிமுறைகளின்படி இயங்கிக் கொண்டு இருந்ததாகவும், மற்ற பிற இளம் சுண்டெலிகளுக்கு நான் மிகவும் மோசமான ஒரு முன்னுதாரணமாக விளங்கிக் கொண்டிருந்ததாகவும் இன்னொரு சுண்டெலி சற்று முரட்டுத்தனமாகக் கூறியதைக் கேட்டபோது, என்னை வந்து பார்ப்பதென்று பிக் முடிவு செய்தது.

"நான் ஏன் சுவரில் ஏற விரும்புகிறேன் என்பதில் பிக் ஆர்வம் காட்டவில்லை. அந்த முயற்சி சாத்தியம் என்று எனக்குத் தோன்றுகிறதா என்று அது என்னிடம் கேட்கவும் இல்லை. மாறாக, அந்தச் சுவர் எவ்வளவு உயரம் இருந்தது என்று நான்

www.t.me/tamilbooksworld

மதிப்பிட்டிருந்தேன் என்று அது என்னிடம் கேட்டது.
"நான்கு சுண்டெலிகளின் உயரம் என்று நான் அதனிடம் கூறினேன்.
"ஒரு கணத்திற்குப் பிறகு, 'என்னால் உனக்கு உதவ முடியும் என்று நினைக்கிறேன்,' என்று அது என்னிடம் கூறியது.
"அது எப்படி என்று தான் பிக்கிடம் கேட்டேன். அதன் பதில் என்னவாக இருக்கக்கூடும் என்று நான் யோசித்தேன். ஆனால் அந்த யோசனை நம்புவதற்கு அரிதானதாக இருந்தது.
"ஆனால் தனது திட்டத்தைக் கூறுவதிலிருந்து அது பிக்கைத் தடுக்கவில்லை.
உன்னை அங்கு மேலே தூக்கி எறிய என்னால் முடியும். அதைப் பற்றி நீ

www.t.me/tamilbooksworld

என்ன நினைக்கிறாய்?"
"அது சாத்தியமற்றதுபோல்
தோன்றினாலும், பிக்
உண்மையிலேயே தன்னால் முடியும்
என்று நினைத்தது.
"இரண்டு வார்த்தைகள் மட்டுமே என்
மனத்தில் உதித்தன. 'மிக்க நன்றி,'
என்று நான் ஆழ்ந்த நன்றியைத்
தெரிவித்தேன்.
"நாம் செயலில் இறங்கலாம், என்று பிக்
ஒரு புன்னகையுடன் பரிந்துரைத்தது.
"பிக் தன் குதிங்கால்களை ஊன்றி,
சுவரில் தன் முதுகைச் சாய்த்து
நின்றது. என்னால் முடிந்த அளவுக்கு
வேகமாகத் தன்னை நோக்கி ஓடி
வரும்படியும், தன்னை நெருங்கியவுடன்
மேலே குதிக்குமாறும் அது என்னிடம்
கூறியது. அது கூறியபடியே நான்

www.t.me/tamilbooksworld

செய்தேன். என்னால் முடிந்த அளவுக்கு வேகமாக ஓடி, பிறகு மேலே குதித்தேன். நான் உச்சபட்ச உயரத்தை அடைந்த கணத்தில், பிக் என் பின்னங்கால்களுக்கு அடியில் சென்று, வேகமாக என்னை மேல்நோக்கித் தள்ளிவிட்டதை என்னால் உணர முடிந்தது. என்ன நடந்தது என்பதை நான் அறியும் முன்பு, என் கண்கள் சுவரின் மேற்தளத்திற்குச் சமமாக இருந்தன. நான் மீண்டும் கீழே விழவிருந்த நேரத்தில், சுவரை நோக்கிப் பாய்ந்து அதை இறுகப் பற்றினேன். என்னை நானே மேலே உயர்த்தி, அச்சுவரின் குறுகிய மதிலில் கவனமாக என்னை சமநிலைப்படுத்தினேன்.

"நான் இப்போது சுவரின்மீது நின்று

www.t.me/tamilbooksworld

கொண்டிருந்தேன். இந்தச் சுண்டெலி இப்போது புதிர்க்கட்டடத்திற்கு வெளியே வந்துவிட்டிருந்தது. எந்தவொரு சுண்டெலியும் கனவில்கூட நினைத்துப் பார்த்திருக்க முடியாத அளவுக்கு இந்தச் சுண்டெலியால் இப்போது வெகு தூரம் பார்க்க முடிந்தது. தனக்கு முன்பு எண்ணற்றச் சுண்டெலிகள் கேட்ட, ஆனால் இறுதியில் அது சாத்தியமற்றது என்று ஒதுக்கித் தள்ளிய, 'என் சீஸை நகர்த்தியது யார்?' என்ற கேள்விக்கு இந்தச் சுண்டெலி விடை காணவிருந்தது.

"நான் அதோடு நிற்கப் போவதாக இல்லை."

www.t.me/tamilbooksworld

என் சீஸை நகர்த்தியது யார்?
மேக்ஸ் தன் கதையைத் தொடர்ந்தது.

"அங்கு வேறு சிலரும் இருந்தனர். அவர்கள் சுண்டெலிகளைப்போல் இருந்தாலும், சற்றுப் பெரிதாக இருந்தார்கள். அவர்கள் பெரும்பாலான சுண்டெலிகளைவிட அதிக சாமர்த்தியம் கொண்டவர்களாகவும், சில சுண்டெலிகளோடு ஒப்பிடுகையில் அவ்வளவு சாமர்த்தியம் இல்லாதவர்களாகவும் இருந்தனர். மனிதர்கள் என்று அவர்கள் அழைக்கப்படுகின்றனர். இவர்களில் சிலர்தான் புதிர்க்கட்டத்தைப் படைத்தவர்கள். அது அவர்களுக்கு இன்பத்தையும் லாபத்தையும் கொடுப்பதற்காக இருக்கின்றது. அதாவது, அவர்களுடைய குறிக்கோள்களுக்காக இருக்கின்றது.

www.t.me/tamilbooksworld

"நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள உலகம் அப்படிப்பட்ட ஒன்றல்ல. அது புதிர்க்கட்டத்திற்கு வெளியே கொடுக்கப்பட்டுள்ள ஒன்றல்ல. அது பிரத்யேகமாக வடிவமைக்கபட்டுள்ளது. இதன் வடிவமைப்பு இதனைக் கட்டுப்படுத்தும் நபர்களுடைய தேவைகளுக்கும் ஆர்வங்களுக்கும் ஏற்றாற்போல் உள்ளது. நம் புதிர்க்கட்டத்திற்கு வடிவம் கொடுப்பவர்கள் இந்த மனிதர்கள்தான். அவர்கள் நம்முடைய விதிமுறைகளை உருவாக்கி, நமக்கு வெகுமதிகளையும் தண்டனைகளையும் வழங்குகின்றனர். அவர்களால் இவ்வாறு செய்ய முடிவதற்குக் காரணம், வேறு எதையும்விட அதிகமாக நாம் சீஸை

www.t.me/tamilbooksworld

நேசிப்பதுதான். அவர்களால் இவ்வாறு செய்ய முடிவதற்குக் காரணம், நாம் அனைவரும் ஒரு புதிர்க்கட்டத்தில் உள்ள சுண்டெலிகள் என்பதுதான். ஒரு புதிர்க்கட்டத்தில் உள்ள ஒரு சுண்டெலிக்கு சீஸ்தான் எல்லாமே.

"புதிர்க்கட்டத்திற்கு வெளியே நான் மேற்கொண்ட எனது முதல் பயணத்திலிருந்து, நான் ஏராளமானவற்றைக் கற்றுள்ளேன். நான் பலமுறை இப்படிப்பட்டப் பயணங்களை மேற்கொண்டுள்ளேன். மனிதர்களின் மொழியைக் கற்பதில் நான் பல மாதங்களைச் செலவிட்டேன். அவர்கள் பேசியதை நான் கேட்டேன். அவர்கள் எழுதியவற்றை நான் படித்தேன். நம்முடைய புதிர்க்கட்டம் பல புதிர்க்கட்டங்களில் ஒன்று என்பதை

www.t.me/tamilbooksworld

நான் கண்டறிந்தேன். பிற சுண்டெலிகளும் பிற மனிதர்களும் அங்கு இருக்கின்றனர். அனைத்து உயிரினங்களும் வெவ்வேறு என்றாலும், சில வழிகளில் எல்லோரும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றனர்.

"நம்மைப் பராமரித்துக் கொள்வதற்கு நமக்கு ஒரு குறிப்பிட்ட அளவு சீஸ் தேவை. நமது தேடல் அதிகமான சீஸ் வேண்டும் என்ற விருப்பத்தால் ஊக்குவிக்கப்படுவதில்லை என்பதை நான் கற்றுக் கொண்டுள்ளேன். வாஸ்தவத்தில், அதிகமான சீஸைப் பெற்றிருப்பது நமக்கு அதிக மகிழ்ச்சியைக் கொடுப்பதில்லை, இன்னும் அதிகமான சீஸைப் பெறுவதுதான் நமக்கு

www.t.me/tamilbooksworld

முக்கியமானதாக இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட அளவு சீஸை நாம் பெற்றவுடன், அது நமக்குப் பழக்கமாகிவிடுவதால், நாம் இன்னும் அதிகமான சீஸை விரும்புகிறோம். "புதிர்க்கட்டத்தில் நமது வாழ்க்கையானது, சீஸ் எவ்வளவு அதிகமாக இருந்தாலும் அது ஒரு சுண்டெலியைத் திருப்திப்படுத்தாது என்ற நிலைக்கு நம்மைத் தயார் செய்துவிடுகிறது. நாம் புதிர்க்கட்டத்தின் ஊடாக ஓடும்போது, மகிழ்ச்சியையும் அமைதியையும் தேடியே நமது வாழ்க்கையைச் செலவிடுகிறோம். ஆனால் நாம் வந்து சேர வேண்டிய இடத்தை வந்தடைந்தவுடன், அவற்றை நம்மால் கண்டுபிடிக்க முடிவதில்லை. இன்னும்

www.t.me/tamilbooksworld

அதிக சீஸ்தான் அங்கு இருக்கிறது. சீஸ் மீண்டும் மீண்டும் தன் வாக்கைக் காப்பாற்றத் தவறுகிறது. ஆனாலும், சீஸைப் பற்றிய நமது நம்பிக்கைகள் குறித்தோ அல்லது எது நமக்கு உண்மையிலேயே மகிழ்ச்சியைக் கொண்டு வரும் என்பது பற்றியோ நாம் கேள்வி கேட்க மறுக்கிறோம். இப்படியே நம் தேடல் தொடர்கிறது.

"ஸெட், சற்று நேரத்திற்கு முன்பு, இங்கு குழுமியிருந்த சுண்டெலிகளிடம் நீ இவ்வாறு கேட்டாய்: மகிழ்ச்சிக்கான தேடல் உங்களை மகிழ்ச்சிப்படுத்தவில்லை என்றால், மகிழ்ச்சியை அடைவது உங்களுக்கு சாத்தியப்படுமா?

"இக்கேள்விக்கு விடையளிக்க எத்தனைச் சுண்டெலிகளுக்குத்

www.t.me/tamilbooksworld

துணிச்சல் உள்ளது? நாம் என்ன செய்ய வேண்டும் என்று அந்த விடை மறைமுகமாகக் கூறுவதை எத்தனைச் சுண்டெலிகளால் ஏற்றுக் கொள்ள முடியும்? அச்சுண்டெலிகள் ஒருபோதும் கற்றுக் கொண்டிராத விஷயங்களைச் செய்ய வேண்டும் என்று நீ அவற்றைக் கேட்டுக் கொள்கிறாய். கேள்வி கேட்க வேண்டும், சிந்திக்க வேண்டும் என்று நீ அவற்றிடம் கூறுகிறாய். ஆனால், தமக்குக் கொடுக்கப்பட்டுள்ளதை அப்படியே ஏற்றுக் கொள்வதை அவை தேர்ந்தெடுக்கின்றன. அவை தம்மையே தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் என்று நீ கூறுகிறாய், ஆனால் சீஸைத் தேடுவதில் அவை மும்முரமாக உள்ளன. அவை தம்முடைய வாழ்க்கையைத் தம்முடைய

www.t.me/tamilbooksworld

கட்டுப்பாட்டில் வைத்து நடத்த வேண்டும் என்று நீ அவற்றைக் கேட்டுக் கொள்கிறாய், ஆனால் புதிர்க்கட்டத்தில் ஓடுவதில் அவை மும்முரமாக இருக்கின்றன.

"ஸெட், அவை ஒரு குறிப்பிட்ட விதத்தில் 'இருக்க வேண்டும்' என்று நீ அவற்றிடம் கூறுகிறாய். ஆனால் செயல்களைச் செய்ய மட்டுமே அவை கற்றுக் கொண்டுள்ளன.

"ஆனால் சுண்டெலிகளாகிய நாம் இதில் தனித்து இருக்கவில்லை. அனைத்து உயிரினங்களும் இப்படித்தான் இருக்கின்றன. மனிதர்கள் கூட இப்படித்தான் இருக்கின்றனர். அவர்களுக்கும் புதிர்க்கட்டங்கள் உள்ளன. அவர்களிடமும் சீஸ் இருக்கிறது.

www.t.me/tamilbooksworld

ஆனால் அவர்கள் அந்தப் பெயர்களைப் பயன்படுத்துவது இல்லை. சுண்டெலிகளைப் பற்றி அவர்கள் சில விஷயங்களைக் கண்டறிந்துள்ளனர், ஆனால் தங்களுடைய வாழ்க்கையும் சுண்டெலிகளின் வாழ்க்கையைப் போலவே இருப்பதை அவர்கள் பார்ப்பதில்லை. அவர்களும் தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள புதிர்க்கட்டத்தை அப்படியே ஏற்றுக் கொண்டு, அதிலுள்ள சுவர்கள் தங்களால் ஏற முடியாதவை என்றே பார்க்கின்றனர். அவர்களும் நடவடிக்கை எடுக்க மறுக்கின்றனர். அவர்களும் மிக முக்கியமான கேள்விகளைக் கேட்கத் தவறிவிடுகின்றனர்.

"'என் சீஸை நகர்த்தியது யார்?' என்று

www.t.me/tamilbooksworld

கேட்டது பொருத்தமற்றதுமல்ல, நடைமுறைக்கு ஒவ்வாததும் அல்ல என்பதை நான் கண்டறிந்துள்ளேன். அந்தக் கேள்விக்கான விடை தெரிந்தாக வேண்டும். ஏனெனில், அதை நம்மால் கட்டுப்படுத்த முடியும். உண்மையில், அது கட்டுப்படுத்தப்படுகிறது. ஆனால் ஒரு புதிர்க்கட்டத்தில் உள்ள சுண்டெலிகள் அதைக் கட்டுப்படுத்துவது இல்லை. தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் புதிர்க்கட்டத்தை ஒரு சிறையாக ஏற்றுக் கொண்டுவிட்ட சுண்டெலிகளால் பிறரின் வடிவமைப்புகளுக்கு ஏற்ப நடந்து கொள்வதைத் தவிர வேறு எந்தத் தீர்மானத்தையும் மேற்கொள்ள முடியாது. ஆனால், தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும்

www.t.me/tamilbooksworld

புதிர்க்கட்டத்தை அப்படியே ஏற்றுக் கொள்ள மறுக்கின்ற, அதன் வடிவமைப்பின்மீது கேள்வி எழுப்புகின்ற சுண்டெலிகளுக்கு, இன்னொரு சாத்தியக்கூறு இருக்கிறது. நடவடிக்கை எடுப்பதற்கான தீர்மானம்தான் அது. "எனவே நான் நடவடிக்கை எடுத்தேன். 'ஏன்' என்ற கேள்விக்கு விடை கிடையாது என்று எனக்குக் கூறப்பட்டிருந்தது. மாற்றத்தை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு எந்த வழியும் கிடையாது என்று எனக்குக் கூறப்பட்டிருந்தது. சீஸை மட்டுமே நான் தேடிச் செல்ல வேண்டும் என்று எனக்குக் கூறப்பட்டிருந்தது. சீஸ் குறித்தத் தேடல்தான் நமது விதி என்று எனக்குக் கூறப்பட்டிருந்தது.

www.t.me/tamilbooksworld

என்னுடைய இடம் புதிர்க்கட்டத்தில்தான் இருக்கிறது என்றும், புதிர்க்கட்டம்தான் நமக்கு விதிக்கப்பட்ட ஒன்று என்றும் எனக்குக் கூறப்பட்டிருந்தது.

"ஆனால், உண்மை அதுவல்ல என்பதை நான் நிரூபித்திருக்கிறேன்.

"அது மட்டுமல்ல. நான் இன்னொரு விஷயத்தையும் செய்திருக்கிறேன்.

"குழப்பத்திலோ அல்லது விரக்தியிலோ ஏதேனும் ஒரு சுண்டெலி, 'என் சீஸை நகர்த்தியது யார்?' என்று உரத்தக் குரலில் கேட்டால், அது ஒரு பொருட்டே அல்ல என்றும், சீஸ் நகர்த்தப்பட்டுவிட்டதை மட்டும்தான் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் அந்தச் சுண்டெலியிலிடம் நான் கூற வேண்டும் என்று எனக்குக் கற்றுக்

www.t.me/tamilbooksworld

கொடுக்கப்பட்டது.
"ஆனால் அந்தக் கேள்விக்கு இப்போது என்னிடம் வேறொரு பதில் இருக்கிறது. அடுத்த முறை ஒரு சுண்டெலி உரத்தக் குரலில், 'என் சீஸை நகர்த்தியது யார்?' என்று கேட்டால், நான் அக்கேள்விக்கு விடையளிக்கப் போகிறேன்.
"ஆனால் அந்த விடை நீ நினைக்கும் விடையாக இருக்காது, ஸெட். ஏனென்றால், விஷயங்கள் இப்போது வேறு விதமாக உள்ளன...நான்தான் அவற்றை மாற்றினேன்.
"இதுதான் அந்தச் சுண்டெலியின் கேள்விக்கான எனது விடை: உன் சீஸை நகர்த்தியது நான்தான்."

www.t.me/tamilbooksworld

உன் சீஸை நகர்த்தியது நான்தான்

"மனிதர்களின் மொழியை நான் கற்றுக் கொண்டவுடன், என் நேரத்தின் பெரும்பகுதியை அவர்களைக் கண்காணிப்பதில் செலவிட்டேன். புதிர்க்கட்டத்தைப் பற்றி அவர்கள் எழுதியதையும் படித்தேன். புதிர்க்கட்டத்தை அவர்கள் எவ்வாறு வடிவமைத்தனர், எதற்காக வடிவமைத்தனர் என்பதையும் கற்றேன். சீஸை அவர்கள் ஏன் நகர்த்தினார்கள், அதை எங்கு நகர்த்த வேண்டும் என்பதை எப்படித் தீர்மானித்தார்கள் என்பதையும் நான் கற்றேன். எனது குழந்தைப் பருவம் முதலாக நான் கேட்டு வந்திருந்த பல கேள்விகளுக்கு விடைகள் எனக்குக் கிடைத்தன. புதிர்க்கட்டத்தில் ஏன் பல பிரயோஜனமற்ற வழிகள்

www.t.me/tamilbooksworld

இருக்கின்றன என்பதையும், ஒரே இடத்தைச் சென்றடைவதற்கு ஏன் பல்வேறு வழிகள் உள்ளன என்பதையும் நான் கண்டறிந்தேன். "நான் இவை அனைத்தையும் கற்றேன். புதிர்க்கட்டத்தில் விஷயங்கள் ஏன் ஒரு குறிப்பிட்ட விதத்தில் நடைபெறுகின்றன என்பதை இது விளக்கியது, ஆனால் அவற்றை நியாயப்படுத்தவில்லை. வாஸ்தவத்தில், அதில் எந்தவிதமான நியாயமும் இருக்கவில்லை. ஏனெனில், புதிர்க்கட்டத்தை வடிவமைத்தவர்கள், அதைத் தங்கள் சொந்த நலனுக்காகவும் சொந்தக் குறிக்கோளுக்காகவுமே செய்தனர். ஆனால் அவர்கள் அந்தப் புதிர்க்கட்டத்தில் வாழவில்லை.

www.t.me/tamilbooksworld

நாம்தான் அதில் வாழ்கிறோம். 'ஏன்' என்பதை நான் புரிந்து கொண்டேன், ஆனால் அதை ஏற்றுக் கொள்வதற்கு நான் தயாராக இல்லை.

"எனவே, அது குறித்து ஏதேனும் செய்வது என்று தீர்மானித்தேன்.

"அதை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதைக் கண்டறிய எனக்கு ஒருசில வாரங்களே ஆயின. நம்முடைய புதிர்க்கட்டத்தை வடிவமைத்த நிர்வாகிகள், ஒவ்வொரு நாள் இரவும் தங்களுடைய உதவியாளர்களுக்கு செயல்பாட்டுக் கட்டளைகளை விட்டுச் சென்றனர். காலையில், அந்த உதவியாளர்கள் அவற்றைப் படித்து, அவற்றுக்கு ஏற்றாற்போல் புதிர்க்கட்டத்தில் பொருத்தமான மாற்றங்களைச் செய்தனர். பிறகு

www.t.me/tamilbooksworld

மதியம் முழுவதும் அவர்கள் சுண்டெலிகளைக் கண்காணித்து, தாங்கள் கண்டவற்றை ஒரு பதிவேட்டில் குறித்து வைத்தனர். மாலையில், அந்த நிர்வாகிகள் தங்களது உதவியாளர்கள் விட்டுச் சென்ற குறிப்புகளைப் படித்து, அடுத்த நாளுக்கான செயல்பாட்டுக் கட்டளைகளைத் தீர்மானித்தனர். இச்சுழற்சி ஒவ்வொரு நாளும் தொடர்ந்தது. இவை அனைத்தும் மிகவும் அலுப்பூட்டும் விஷயங்கள்தான்.

"அப்போதுதான் நான் அங்கு சென்றேன்.

"அந்த நிர்வாகிகள் தங்கள் உதவியாளர்களுக்கு விட்டுச் சென்ற கட்டளைகளையும், அந்த

www.t.me/tamilbooksworld

உதவியாளர்கள் தங்கள் பதிவேட்டில் குறித்து வைத்திருந்த விஷயங்களையும் நான் மாற்றத் துவங்கினேன். இவ்வழியில், புதிர்க்கட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்களில் என்னால் தாக்கம் ஏற்படுத்த முடிந்தது. நான் மெதுவாகத் துவக்கினேன். ஆரம்பத்தில், மிகச் சிறிய மாற்றங்களை மட்டுமே நான் செய்தேன். ஒரு நேரத்தில் ஒரு சுவரை நகர்த்தினேன். பின், நமது புதிர்க்கட்டத்தின் ஏதோ ஒரு தனியான மூலையில் மாற்றங்களை ஏற்படுத்தினேன். இறுதியில், நான் அதிகத் துணிச்சல் பெற்றேன். புதிர்க்கட்டத்தைக் கிட்டத்தட்ட ஒட்டுமொத்தமாக மறுவடிவமைப்பு செய்தேன். புதிர்க்கட்டம் இப்போது

www.t.me/tamilbooksworld

அதிகச் செயற்திறன் வாய்ந்ததாகவும், அதன் வடிவம் அதிக உத்வேகமூட்டுவதாகவும் உள்ளது. புதிர்க்கட்டத்தில் இப்போது அதிகமான சீஸ் இருக்கின்றது, அதைக் கண்டுபிடிப்பது எப்போதும் சுலபமானதாக இல்லாதபோதும்கூட.

"நான் ஏன் இதைச் செய்ய வேண்டும்? என்னுடைய குறிக்கோள் என்ன? சுண்டெலிகள் புதிர்க்கட்டத்தை அதன் அனைத்து அம்சங்களுடனும் முழுமையாகப் பார்ப்பதற்கு உதவுவதும், தாம் தேர்ந்தெடுத்துள்ள பாதைகளை மதிப்பீடு செய்வதற்கு அவற்றுக்கு அதிக நேரம் கொடுப்பதும், சிந்திப்பதற்கு அவற்றை ஊக்குவிப்பதும், மகிழ்ச்சி உண்மையிலேயே எதைச்

www.t.me/tamilbooksworld

சார்ந்துள்ளது என்பதைக் கண்டறிய அவற்றை ஊக்கப்படுத்துவதும், தமது சொந்தக் குறிக்கோளைக் கண்டறிவதற்கு அவற்றை ஊக்குவிப்பதும்தான் என் குறிக்கோள். "ஆனால் இதில் வேடிக்கையைப் பார்த்தாயா? நான் மற்ற சுண்டெலிகளுக்கு உதவ முயற்சித்தும்கூட, என் விருப்பத்தேர்வுகளின் அடிப்படையில் அமைந்துள்ள, என்னுடைய சொந்தக் குறிக்கோளுக்கு உதவுகின்ற ஒரு புதிர்க்கட்டம்தான் உருவாகியுள்ளதே தவிர, அச்சுண்டெலிகளின் குறிக்கோளுக்கு உதவுகின்ற ஒரு புதிர்க்கட்டம் உருவாகவில்லை, புதிர்க்கட்டத்தில் உள்ள சுண்டெலிகள் முன்பைவிட இப்போது அதிக சுதந்திரம்

www.t.me/tamilbooksworld

எதையும் அனுபவிக்கவில்லை. புதிய புதிர்க்கட்டம் பழைய புதிர்க்கட்டத்தைவிடச் சிறப்பாக இருப்பது உண்மைதான், ஆனால் அச்சுண்டெலிகள் இன்னும் மற்றவர்களின் விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் செயல்பட வேண்டியுள்ளது.

"ஆனால் இது அப்படி இருக்கத் தேவையில்லை.

"தான் இனி வெறுமனே சீஸைத் துரத்திக் கொண்டு ஓடப் போவதில்லை என்று எந்தவொரு சுண்டெலியும் தானாகவே தீர்மானித்தால், அது சுதந்திரம் பெற்றுவிடும். அதன்மீது எனக்கு எவ்விதக் கட்டுப்பாடும் இருக்காது. எனது விதிமுறைகள் பொருத்தமற்றவையாக ஆகிவிடும்.

www.t.me/tamilbooksworld

"பல மாதங்களுக்கு முன்பு நான் தீர்மானித்ததைப்போல், இதைவிட்டு வெளியேறப் போவதாகத் தனியொரு சுண்டெலி முடிவு செய்துவிட்டால், கண்டிப்பாக அதற்கு சுதந்திரம் கிடைத்துவிடும்.

"சீஸைவிட அதிக சுவாரசியமான, அதிக முக்கியமான விஷயங்கள் உள்ளதாக நீ சிறிது நேரத்திற்கு முன்பு முழங்கியதைப்போல் தனியொரு சுண்டெலி முழங்கினால், அது சுதந்திரம் அடைந்துவிடும்.

"புதிர்க்கட்டத்தில் உள்ள ஒரு சுண்டெலியிடம் இவை அனைத்தையும் கூறிப் பார். அது எப்படி நடந்து கொள்ளும் என்று நீ நினைக்கிறாய்? எந்தவொரு சுண்டெலியாலும் மேன்மையை அடைய முடியாது என்று

www.t.me/tamilbooksworld

அது நம்பியிருந்தால், மேன்மை சாத்தியம்தான் என்று தனக்குக் காட்டியதற்காக அது உனக்கு நன்றி தெரிவிக்கும். ஆனாலும், மேன்மையடைவது சாத்தியமற்றதாக இருக்கக்கூடாதா என்று இரகசியமாகப் பிரார்த்திக்கின்ற சில சுண்டெலிகளும் இருக்கின்றன. ஏனெனில், கேள்வி ஏதும் கேட்காமல் வெறுமனே சீஸைத் துரத்திச் செல்கின்ற தமது போக்கை நியாயப்படுத்துவதற்கு இது மட்டுமே அவற்றுக்கு உதவுகிறது.
மேன்மைத்துவம் சாத்தியம்தான் என்று அப்படிப்பட்ட ஒரு சுண்டெலியிடம் நீ கூறினால், அதற்காக அது உன்னை வெறுக்கும்.
"சீஸிற்கான பசியைவிட உத்வேகத்திற்கான பசி அதிகமாக

www.t.me/tamilbooksworld

இருப்பதாக நான் நம்புகிறேன். ஆனால் என் நம்பிக்கை தவறானதாக இருந்தாலும்கூட, தாம் சிறியவர்கள், முக்கியமற்றவர்கள் என்று சுண்டெலிகளுக்குக் கற்பிக்கின்ற ஒரு புதிர்க்கட்டத்தை என்னால் அனுமதிக்க முடியாது. பலவீனத்திலும் துன்பத்திலும் உன்னதம் இருக்கிறது அல்லது ஞானம் இருக்கிறது என்று சுண்டெலிகளுக்குக் கற்பிக்கின்ற ஒரு புதிர்க்கட்டத்தை என்னால் அனுமதிக்க முடியாது. சீஸ் குறித்தத் தேடலைத் தலைவிதியாக ஆக்குகின்ற ஒரு புதிர்க்கட்டத்தை என்னால் அனுமதிக்க முடியாது. ஓர் இளம் சுண்டெலியால் எதையும் தெரிந்து கொள்ள முடியாது அல்லது சாதிக்க முடியாது என்று அதனிடம் கூறுகின்ற ஒரு

www.t.me/tamilbooksworld

புதிர்க்கட்டத்தை என்னால் அனுமதிக்க முடியாது. இதே போன்ற ஒரு புதிர்க்கட்டத்தில்தான் நானும் ஓர் இளம் சுண்டெலியாக இருந்தேன். எனவே, இப்படிப்பட்ட போதனைகளை நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்.

"அதுதான் என் தேடல்.

"இவ்விஷயங்களை நான் பகிர்ந்து கொள்கின்ற முதல் சுண்டெலி நீதான். ஏனெனில், நீ புரிந்து கொள்வாய் என்று எனக்குத் தெரியும். இது எனக்குத் தெரிந்திருப்பதற்கான காரணம் எளியது.

"புதிர்க்கட்டத்தில் உள்ள அனைத்துச் சுண்டெலிகளின் சீஸையும் நான்தான் நகர்த்தினேன், அவற்றின்மீது தாக்கத்தை ஏற்படுத்தினேன். அவற்றின் சீஸை நகர்த்தியதன்

www.t.me/tamilbooksworld

மூலமாக, அவை சிந்தித்த விதத்தையும், அவை உணர்ந்த முறையையும், அவை பயணித்தத் திசையையும், அவை நம்பிய விஷயங்களையும் மாற்றினேன்.

"ஸெட், நான் உன்னுடைய சீஸையும் பல முறை நகர்த்தினேன். ஆனால் நீ அதைத் துளிகூடப் பொருட்படுத்தவில்லை."

www.t.me/tamilbooksworld

மேக்ஸ் தன் கதையைக் கூறி முடித்தது. அது மனநிறைவுடன் இருந்தது அதன் முகத்தில் பிரதிபலித்தது. ஸெட்டிடம் இருந்து மேக்ஸ் எதையும் எதிர்பார்க்கவில்லை. ஸெட்டின் அனுமதியை அது கோரி நிற்கவில்லை. எந்தவொரு குறிப்பிட்ட பதிலையும் அது ஸெட்டிடம் இருந்து எதிர்பார்க்கவில்லை.

"உன்னுடைய கதையை என்னுடன் பகிர்ந்து கொண்டதற்கு நன்றி. உன்னுடையது ஒரு குறிப்பிடத்தக்கப் பயணம்தான். நீ மற்ற எந்தவொரு சுண்டெலியைப் போலவும் இல்லை," என்று ஸெட் கூறியது.

இப்போது இருட்டிவிட்டிருந்தது.

"நாளைக்கு நாம் தொடர்ந்து பேசலாம். இப்போது நேரமாகிக்

www.t.me/tamilbooksworld

கொண்டிருக்கிறது. காலையில் என்னை இதே இடத்தில் நீ சந்திப்பாயா?" என்று ஸெட் கேட்டது.
“சரி,” என்று மேக்ஸ் கூறியது.
ஸெட் அங்கிருந்து எழுந்து, அங்கிருந்த பாதையில் தன்னைக் கடந்து செல்லும் என்று மேக்ஸ் எதிர்பார்த்தது. ஆனால் அதற்குப் பதிலாக, ஸெட் அங்கிருந்த ஒரு மூலையை நோக்கித் திரும்பி, நேராகச் சுவரை நோக்கி நடக்கத் துவங்கியது. மேக்ஸ் அதைக் குழப்பத்துடன் பார்த்தது. அது ஒரு முட்டுச் சந்து. அங்கு வழியேதும் இருக்கவில்லை. இரவும் முழுதும் அந்த மூலையில் நிற்பதற்கு ஸெட் திட்டமிட்டுள்ளதா? செட் தன்னிலை மறந்துவிட்டதா?
ஸெட் தொடர்ந்து நடந்து கொண்டே

www.t.me/tamilbooksworld

இருந்தது.
ஸெட் அந்தச் சுவரில் முட்டுவதற்கு ஒரு கணம் முன்பு, அதை எச்சரிப்பதற்காக, "நில்!" என்று கத்துவதற்கு மேக்ஸ் தன் வாயைத் திறந்தது.
பிறகு அது நிகழ்வதை மேக்ஸ் கண்டது. தன் கண்முன்னே அந்தச் சுவரின் ஊடாக ஸெட் நடந்து சென்றதை மேக்ஸ் பார்த்தது. அங்கு எந்தச் சுவரும் இல்லாததுபோல், அந்தச் சுவர் வெறும் காற்றினால் ஆனது என்பதுபோல், அந்தச் சுவர் அங்கிருந்தது ஒரு பொருட்டல்ல என்பதுபோல் அது நடந்து சென்றது. பிறகு ஸெட் மறைந்துவிட்டது. சுவரை வெறித்துப் பார்த்தபடி மேக்ஸ் அங்கு நின்று கொண்டிருந்தது.
ஒரு கணத்திற்குப் பிறகு, சுவரின்

www.t.me/tamilbooksworld

மறுபக்கத்தில் இருந்து ஸெட்டின் குரல் கேட்டது.
"மேக்ஸ், நீ கூறியது சரிதான். சுதந்திரமாக இருப்பது சாத்தியம்தான். நாளைய தினம் என்னுடைய கதையை நான் உனக்குக் கூறுகிறேன்," என்று ஸெட் கூறியது.
பெருத்த அதிர்ச்சியுடன் மேக்ஸ் அங்கேயே உட்கார்ந்துவிட்டது. ஸெட் புன்னகைத்துக் கொண்டிருந்தது அதற்குத் தெரிந்தது. பதிலுக்கு மேக்ஸ் சிரித்தாக வேண்டியிருந்தது.
"இந்த ஒட்டுமொத்த நேரமும் நான் ஒருவன்தான் பேசிக் கொண்டு இருந்திருக்கிறேன்," என்று மேக்ஸ் தனக்குத் தானே எண்ணிக் கொண்டது.

www.t.me/tamilbooksworld

சுண்டெலிக்குள் ஒரு புதிர்க்கட்டம்

அடுத்த நாள் காலையில் ஸெட்டை சந்திப்பதற்கு மேக்ஸ் முன்னதாகவே வந்துவிட்டது. இரவு முழுவதும் அது தூங்கியிருக்கவில்லை. ஆனால் எப்போதையும்விட இப்போது அது அதிக விழிப்பாகவும் ஜீவனோடும் இருந்தது. ஸெட்டின் வரவை எதிர்பார்த்து அங்கிருந்த நீண்ட பாதையைத் தான் பார்த்துக் கொண்டிருந்ததை அது கவனித்தது. மேக்ஸால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

வேறு ஏதேனும் ஒரு சுண்டெலியாக இருந்தால், அந்த நீண்ட பாதை வழியாக நடந்து வர வேண்டியிருந்திருக்கும் என்று அது நினைத்தது. ஆனால் ஸெட் அவ்வழியாக வரத் தேவையில்லை.

www.t.me/tamilbooksworld

அந்தப் பாதைக்கும் ஸெட்டிற்கும் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை. ஸெட்டால் எங்கிருந்து வேண்டுமானாலும் தோன்ற முடியும்.

அப்போது ஸெட் தன்னை நோக்கி நடந்து வந்ததை மேக்ஸ் பார்த்தது. வேறு எந்தவொரு சுண்டெலியும் நடந்து வரக்கூடிய அதே நீண்ட பாதையில்தான் ஸெட்டும் நடந்து வந்தது. அதை நினைத்து மேக்ஸ் மீண்டும் சிரித்தது.

பரஸ்பர நல விசாரிப்பு முடிந்து அவை இரண்டும் அமர்ந்தவுடன், ஸெட் பேசியது.

"மேக்ஸ், நேற்று நீ உன் கதையைக் கூறத் துவங்கியதற்கு முன்பு, நீ கூறவிருந்த அனைத்தும் உண்மை என்று என்னிடம் கூறினாய்.

www.t.me/tamilbooksworld

'சாத்தியமற்றது உட்பட.'"
"ஆம்," என்று மேக்ஸ் ஒப்புக் கொண்டது.
"நான் கூறவிருக்கும் எதுவும் சாத்தியமற்றதல்ல என்று கூறி நான் என் கதையைத் துவக்க விரும்புகிறேன்," என்று ஸெட் கூறியது.
மேக்ஸ் தலையசைத்தது.
ஸெட் தொடர்ந்து பேசியது.
"புதிர்க்கட்டத்தைவிட்டு வெளியேறிய பிறகு நீ சாதித்தவற்றுக்கும், நேற்றிரவு நான் செய்ததற்கும் இடையே எந்தவொரு வித்தியாசமும் இல்லை என்று நான் கூறினால், அதற்கு நீ என்ன கூறுவாய்?"
"அது உண்மையாக இருக்கக்கூடும், ஆனால் அது எப்படி சாத்தியமாக முடியும் என்று நான் கேட்டிருப்பேன்,"

www.t.me/tamilbooksworld

என்று மேக்ஸ் பதிலளித்தது.
"மேக்ஸ், புதிர்க்கட்டத்தைவிட்டு நீ எப்படி வெளியேறினாய்?" என்று ஸெட் கேட்டது.
"நான் சுவரின் மேற்புறத்தைப் பிடித்து, மேலே எம்பினேன். பிறகு வெளியே குதித்தேன். உதவிக்கு எனக்கு ஒரு சுண்டெலி இருந்தது. பிக் அங்கு எனக்கு உதவியது," என்று மேக்ஸ் விடையளித்தது.
"அவை அனைத்தும் உண்மைதான். ஆனால் உன் கதையில் சற்றுப் பின்னோக்கிப் போய்ப் பார். நீ மட்டுமே புதிர்க்கட்டத்தைவிட்டு வெளியேறிய ஒரே சுண்டெலியாக இருப்பதற்கு என்ன காரணம்? உனக்கு உதவுவதற்கு பிக் அங்கு ஏன் இருந்தது? ஒரு சுவரின் மேற்பகுதியை அடையும் நிலையை

www.t.me/tamilbooksworld

உன் வாழ்வில் நீ எப்படி அடைந்தாய்?"
மேக்ஸ் ஒரு கணம் யோசித்தது. பிறகு,
"புதிர்க்கட்டத்தில் இருந்து
வெளியேறுவதற்கு நான் மட்டுமே
முயற்சித்துக் கொண்டிருந்தேன்,"
என்று விடையளித்தது.
"அப்படியானால், உன் சாதனைக்கான
இன்றியமையாத காரணம் எது?"
"என்னுடைய தீர்மானம். எனது உறுதி.
எனது சிந்தனை. நான் தப்பிவிடுவேன்
என்று நான் நினைத்தேன்."
"பிற அனைத்தும் அதைப்
பின்தொடர்ந்தன, அப்படித்தானே?"
என்று ஸெட் கேட்டது.
"ஆம்"
"உனக்கு ஓர் எண்ணம் உதித்தது.
உன்னுடைய எண்ணத்திற்கு, அதாவது
உன்னுடைய முன்னோக்கிற்கு பௌதீக

www.t.me/tamilbooksworld

வடிவம் கொடுத்த நடவடிக்கைகளை அந்த எண்ணம் வழிநடத்தியது. என் விஷயத்திலும் அப்படித்தான். என்னால் என்ன செய்ய முடியும் என்று நினைத்தேனோ, அதை நான் செய்தேன். எது எப்படி இருக்க வேண்டும் என்று நான் தீர்மானித்தேனோ, அதை நான் அப்படியே செய்தேன். பெரும்பாலான சுண்டெலிகளைப் போலன்றி, புதிர்க்கட்டத்தைப் பற்றியோ அல்லது சுவர்களைப் பற்றியோ நான் ஒருபோதும் சிந்திப்பதில்லை. நம் இருவருக்கும் இடையே உள்ள பொதுவான விஷயம் இது."

அதற்கு மேக்ஸ், "ஆனால் ஒரு வித்தியாசம் இருக்கிறது. நான் செய்தது சாத்தியமான காரியம்.

www.t.me/tamilbooksworld

ஆனால் நீ செய்தது . . .
உடல்ரீதியாகவோ அல்லது . . . நமக்குத் தெரிந்த அனைத்துடனும் இது முரண்பட்டு இருக்கிறது. அது அப்படி இருக்க முடியாது," என்று கூறியது.
"அப்படியென்றால் இங்கு எந்த வித்தியாசமும் இல்லை. நீ சாதித்த விஷயம் உனக்கு சாத்தியப்படுமென்று இந்தப் புதிர்க்கட்டத்தில் ஒரு சுண்டெலிகூட நம்பவில்லை. அது அவற்றின் சிந்தனைக்கு அப்பாற்பட்டு இருந்தது, ஆனால் உன்னுடைய சிந்தனைக்கு அப்பாற்பட்டு அல்ல," என்று ஸெட் கூறியது.
"அதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனாலும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. புதிர்க்கட்டத்தில் இருந்து நான் எப்படித் தப்பினேன் என்று

www.t.me/tamilbooksworld

என்னால் உனக்கு விளக்க முடியும். நான் ஏற்கனவே அதை உனக்கு விளக்கியிருக்கிறேன். ஆனால் அந்தச் சுவரின் ஊடாக நீ எப்படி நடந்து சென்றாய் என்பதை உன்னால் எனக்கு விளக்க முடியுமா அல்லது என்னிடம் விவரிக்க முடியுமா?" என்று மேக்ஸ் கேட்டது.

அதற்கு ஸெட் இவ்வாறு பதிலளித்தது. "ஆம், என்னால் விளக்க முடியும். நமக்கு நிகழும் விஷயங்கள் மற்றும் நாம் செய்யும் விஷயங்கள் அனைத்தும் நம் எண்ணங்களில் இருந்துதான் முளைவிடுகின்றன. பௌதீகரீதியான தேடல்களை எடுத்துக் கொள்: ஒரு சீஸ் துண்டை நாம் அடைய விரும்பினால், அந்த சீஸை நோக்கி நகர்வதற்கு நமது சிந்தனை நமது உடலை இயக்குகிறது.

www.t.me/tamilbooksworld

நம்முடைய எண்ணங்களும் உடலும் நேரடியாக இணைக்கப்படாமல் உள்ளபோதிலும், நமது உடல் அதற்கு விடையளிக்கும் விதமாக நடந்து கொள்கிறது. ஏனெனில், குறிப்பிட்ட, அர்த்தமுள்ள வழிகளில் உடலை நகர்த்துவது சாத்தியம் என்று மனம் வலியுறுத்துகிறது. புதிதாகப் பிறந்துள்ள ஒரு சுண்டெலியைக் கவனித்துப் பார். நாம் பிறக்கும்போது அப்படிப்பட்ட உறுதி எதுவும் நம்மிடம் இருப்பதில்லை, ஆனால் தொடர்ச்சியான பயிற்சி மற்றும் சிந்தனையின் வாயிலாக நாம் அதை வளர்த்தெடுக்க வேண்டும் என்பதை நீ காண்பாய். நம்முடைய பிற தேடல்களிலும் இதுதான் நடக்கிறது. நாம் ஒரு பிரச்சனைக்குத் தீர்வு

www.t.me/tamilbooksworld

காண்பதன்மீது கவனம் செலுத்தினால், இந்த இலக்கை அடைவதற்கான நோக்கத்திற்கும், அதைப் பின்தொடர்கின்ற உளரீதியான முயற்சிக்கும், அப்பிரச்சனைக்கான தீர்வுக்கும் இடையே கண்ணுக்குப் புலப்படுகின்ற எந்தவிதமான தொடர்பும் இல்லை. பிரச்சனையிலிருந்து ஆய்விற்கும், அதன் பிறகு தீர்வுக்கும் செல்ல நம்மை அனுமதிப்பது நமது மனத்தின் வலியுறுத்தல்தான். இதைத்தான் நாம் புரிந்து கொள்ள வேண்டும், உணர்ந்து கொள்ள வேண்டும். இவை அனைத்திற்குமான விளக்கம் இதுதான் கண்ணுக்குப் புலப்படக்கூடிய தொடர்ச்சி எங்குமே கிடையாது; அனைத்தும் மனத்தின் வலியுறுத்தலில்

www.t.me/tamilbooksworld

இருந்துதான் முளைக்கின்றன."
ஸெட்டின் வார்த்தைகளைக் கருத்தில் ஏற்று, மேக்ஸ் ஸெட்டை உன்னிப்பாகக் கவனித்தது.
ஸெட் தொடர்ந்து பேசியது. "சுவர்களின் ஊடாக உன்னால் நடந்து செல்ல முடியும் என்று நீ நினைக்கிறாயா இல்லையா என்பது ஒரு பொருட்டல்ல. புதிர்க்கட்டத்திலிருந்து தப்பிச் செல்வதற்கு நீ உன் சொந்த வழியைக் கண்டுபிடித்தாயல்லவா? ஆனால் அதே சமயம், நீ எதிர்கொண்ட வேறு எந்தவொரு சுண்டெலியைவிடவும் அதிக தூரம் நீ சென்றதற்கும் அதே செயற்திட்டம்தான் காரணம் என்பதை நீ உணர்ந்து கொள்ள வேண்டும். மற்றவர்கள் ஏற்றுக் கொண்டிருந்த அனுமானங்களையும்,

www.t.me/tamilbooksworld

விதிமுறைகளையும்,
கட்டுப்பாடுகளையும் நீ ஏற்க மறுத்தாய்.
உன்னால் அதிகமானவற்றைத்
தெரிந்து கொள்ள முடியும்,
அதிகமானவற்றைச் செய்ய முடியும்
என்று எண்ணுவதற்கும், அந்த
உறுதியை வளர்த்துக் கொள்வதற்கும்
உன்னால் முடிந்தது. அதனால் நீ
நடவடிக்கை எடுத்தாய். நானும்
அதைத்தான் செய்தேன்.
அனுமானங்களைக் கேள்வி கேட்டேன்.
விதிமுறைகளை மீறினேன்.
கட்டுப்பாடுகளை
உதாசீனப்படுத்தினேன்.
எதுவொன்றும் நமக்கு
விதிக்கப்பட்டுள்ள ஒன்று என்பதை
நம்ப மறுத்தேன். இதனால் ஏற்பட்ட
விளைவு தவிர்க்க முடியாதது.

www.t.me/tamilbooksworld

என்னைப் பொறுத்தவரை, புதிர்க்கட்டம் மறைந்து போனது."

"அப்படியென்றால் . . . புதிர்க்கட்டம் என்ற ஒன்று இல்லவே இல்லையா? எவருக்குமே கிடையாதா?" என்று மேக்ஸ் கேட்டது.

"பெரும்பாலான சுண்டெலிகளைப் பொறுத்தவரை புதிர்க்கட்டம் என்ற ஒன்று இருக்கிறது. அவை அந்தப் புதிர்க்கட்டத்தை அடிப்படையாக வைத்துத் தம்மையும் தம் இருத்தலையும் வரையறுத்துக் கொள்கின்றன. நீயே பல முறை அதைக் கூறியுள்ளாய். புதிர்க்கட்டத்தில் உள்ள சுண்டெலிகள் என்று நீ அவற்றை விவரித்துள்ளாய். இந்தக் கூற்று பொய்யானதல்ல, ஆனால் இது பயங்கரமாக நம்மைத் தவறான

www.t.me/tamilbooksworld

பாதையில் இட்டுச் செல்கிறது."
"அது எப்படி?" என்று மேக்ஸ் கேட்டது.
ஸெட் புன்னகைத்தது.
"மேக்ஸ், ஒரு சுண்டெலி புதிர்க்கட்டத்திற்குள் இருப்பது இங்கு பிரச்சனையல்ல, ஆனால் புதிர்க்கட்டம் அந்தச் சுண்டெலிக்குள் இருப்பதுதான் பிரச்சனையே."

www.t.me/tamilbooksworld

முற்றிலும் வித்தியாசமான ஒரு
சுண்டெலி
மேக்ஸும் ஸெட்டும் ஒரு மணிநேரமாக அமைதியாக உட்கார்ந்திருந்தன. பேசுவதற்கு அங்கு வேறெதுவும் இருக்கவில்லை. அங்கிருந்து புறப்பட்டுச் செல்வதற்கு அவை இரண்டுக்குமே எந்த அவசர வேலையும் இருக்கவில்லை.
மேக்ஸ் யோசித்துக் கொண்டிருந்தது. ஸெட் அதனிடம் விளக்கியிருந்த விஷயங்கள் அனைத்தையும் புரிந்து கொள்வதற்கும் நினைவில் வைத்துக் கொள்வதற்கும் அதன் மனம் மும்முரமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தது. தான் எவற்றைப் புரிந்து கொள்ளத் துவங்கியிருந்தோம் என்பதை உணர்வதற்கு, அதாவது, அவ்விஷயங்களை உண்மையிலேயே

www.t.me/tamilbooksworld

உள்வாங்கிக் கொள்வதற்குத் தனக்கு நீண்ட காலம் ஆகும் என்பதை அது அறிந்திருந்தது. ஆனால் அந்த உரையாடல் மேக்ஸிற்கு வலுவூட்டி இருந்தது. அது மகிழ்ச்சியாக இருந்தது. ஸெட்டும் யோசித்துக் கொண்டிருந்தது. புதிர்க்கட்டத்தைவிட்டு வெளியேறி, தன்னுடைய உலகத்தைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருந்த, தனக்கு முன்னால் அமர்ந்திருந்த அந்த சாகசச் சுண்டெலியைப் பற்றி அது சிந்தித்துக் கொண்டிருந்தது. முன்பு ஒருபோதும் தான் தெரிந்து கொள்ள அக்கறை காட்டாத ஏதோ ஒன்றை மேக்ஸிடம் இருந்து ஸெட் தெரிந்து கொண்டிருந்தது. அதனால் அது புளகாங்கிதம் அடைந்தது. புதிர்க்கட்டத்திற்கு வெளியே,

www.t.me/tamilbooksworld

பதிவேட்டில் மாற்றங்களை ஏற்படுத்தி, ஒவ்வொரு நாளும் தன் படுக்கைக்கு அருகே ஒரு புதிய சீஸ் துண்டை வைத்தது மேக்ஸ்தான் என்பதை ஸெட் தெரிந்து கொண்டது.
சிறிது நேரத்திற்குப் பிறகு இரண்டு சுண்டெலிகளும் தத்தம் வழியே சென்றன. நண்பர்களாக அவை மீண்டும் சந்திக்கும்.
அவை ஒவ்வொன்றும் தன் சொந்த வழியைப் பின்தொடர்ந்து செல்லும். புதிர்க்கட்டத்திற்குள் அல்லது அதற்கு அப்பால் முற்றிலும் வித்தியாசமான ஒரு சுண்டெலி இருக்கின்றது என்ற அறிதல் கொடுத்த வலிமையுடன் அவை மேற்கொள்ளும் பயணம் நெடுகிலும் அவை இரண்டுக்கும் தொடர்ந்து உதவி கிட்டும்.

www.t.me/tamilbooksworld

சில சுண்டெலிகள் பெரியவை

மற்ற நாட்களைப் போன்றே அன்றைய தினமும் பிக்கிற்கு ஒரு சாதாரணமான நாளாகவே அமைந்தது. காலையில் எழுந்து, கைகால்களை நீட்டி முறித்து, பிக் தன் காலைநேர ஓட்டத்தைத் துவக்கியது. தன்னுடைய வழக்கமான பாதையில் புதிர்க்கட்டத்தின் ஊடாக அது வேகமாக ஓடியது. வழக்கமாக அது ஒரு மணிநேரம் ஓடும். பிறகு வலிமையை அதிகரிப்பதற்கான பயிற்சியில் தன் கவனத்தைச் செலுத்தும்.

தன் காலைநேர ஓட்டத்திற்கான பாதையைத் தேர்ந்தெடுக்க பிக் முதலில் தீர்மானித்தபோது, ஒரே ஒரு காரணியின் அடிப்படையில்தான் அந்தத் தீர்மானத்தை மேற்கொண்டது. அது புதிர்க்கட்டத்தின் ஊடாகத்

www.t.me/tamilbooksworld

தன்னுடைய உச்சபட்ச வேகத்தில் ஓட விரும்பியது. மற்ற சுண்டெலிகள் கூட்டமாக உலவிய பகுதிகளில் அது மாட்டிக் கொண்டு திண்டாட விரும்பவில்லை. புதிர்க்கட்டத்தில் மிகக் குறைவான கூட்டம் இருந்த வழிகளை அது ஓடுவதற்குத் தேர்ந்தெடுத்தது.

ஆனால் இன்று, ஏதோ ஒன்று மாறியிருந்ததை பிக் கவனித்தது. ஒவ்வொரு நாளும் தான் ஓடிக் கொண்டிருந்த வழக்கமான பாதை மிகவும் கூட்டமாக இருந்ததை அது கண்டது. அது தன் ஓட்டத்தை முடித்தப் பிறகு, இதைப் பற்றி சிந்தித்துப் பார்த்தது. புதிர்க்கட்டத்தில் இருந்த சுண்டெலிகளின் எண்ணிக்கை சில காலமாக மெல்ல மெல்ல அதிகரித்து

www.t.me/tamilbooksworld

வந்திருந்ததை அது உணர்ந்தது. இதை அது முன்பே கவனித்து இருந்தாலும், இந்த எண்ணிக்கை அதிகரிப்பைப் பற்றி இன்றுவரை அது ஒருபோதும் சிந்தித்துப் பார்த்திருக்கவில்லை. சுண்டலிகளின் பெருக்கம் இன்று பிக்கின் ஓட்டத்தை பாதித்தது. இது குறித்து ஏதேனும் செய்யப்பட்டாக வேண்டும். புதிர்க்கட்டத்தின் ஊடாக நடந்து சென்று, அதை முழுவதுமாக ஆய்வு செய்வதில் பிக் அன்று மதிய நேரத்தைச் செலவிட்டது. அதிக நடமாட்டமில்லாத பாதைகள்மீது அது சிறப்புக் கவனம் செலுத்தியது. தான் போதுமான அளவு பார்த்துவிட்ட உணர்வு அதற்கு ஏற்பட்டபோது, தனக்கு இருந்த வாய்ப்புகளை அது கருத்தில் கொள்ளத் துவங்கியது.

www.t.me/tamilbooksworld

கடந்தகாலத்தில் அது பின்பற்றியிருந்த பாதை இன்றளவும் மிகச் சிறந்த பாதைகளில் ஒன்றாக இருந்தது. அதில் சில மேம்பாடுகளைச் செய்ய முடியும். அவ்வாறு செய்வது ஒரு நல்ல யோசனையாகத் தோன்றியது. பிக் ஒரு மணிநேரமாகப் பிரச்சனையின்மீது கவனம் செலுத்தியது. தான் ஓடுவதற்கான சிறந்த பாதையைக் கண்டுபிடித்துவிட்டத் திருப்தி ஏற்பட்டவரை, தொடர்ந்து அது வேலை செய்தது. தன் புதிய பாதைக்கான வரைபடத்தைத் தயாரித்தது. அது அந்த வரைபடத்தைப் பார்த்தது. அந்த வரைபடம் நன்றாக இருந்தபோதும் அவ்வளவு பிரமாதமாக இருக்கவில்லை.

அது வகுத்திருந்த பாதை ஒரு

www.t.me/tamilbooksworld

குறிப்பிட்டக் காலத்திற்குப் பலனளிக்கும். ஆனால், அதிகத் தனிமையான பாதைகளிலும் விரைவில் கூட்டம் பெருகிவிடும். எக்கச்சக்கமான கூட்டம் இருக்காது என்றாலும், பிக்கின் ஓட்டத்தை மெதுவாக்கும் அளவுக்குக் கூட்டம் இருக்கும். இதை ஏற்றுக் கொள்ள முடியாது.

சூழ்நிலையை அது நன்றாக அலசிப் பார்த்தது. தன் வாழ்வில் முதன்முறையாக, புதிர்க்கட்டத்தைத் தான் கருத்தில் கொண்டிருந்ததை அது கவனித்தது. புதிர்க்கட்டம் பற்றி அது அதற்கு முன்பு ஒருபோதும் சிந்தித்திருக்கவில்லை. புதிர்க்கட்டம் பிக்கிற்குப் பொருத்தமற்றதாக இருந்து வந்தது. ஆனால் இப்போது அதன்

www.t.me/tamilbooksworld

வடிவமைப்பும், அதன் இருத்தலும், பிக்கின் தேடலின் குறுக்கே நின்று கொண்டிருந்தன. பிக்கால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

புதிர்க்கட்டம் பெரியதாக இருந்தது. ஆனால் போதுமான அளவு பெரியதாக இல்லை.

புதிர்க்கட்டம் ஒரு வாழ்க்கைமுறை. ஆனால் அது பிக்கின் வாழ்க்கைமுறை அல்ல.

பிக்கிற்குத் தெரிந்த ஒரே விஷயம் புதிர்க்கட்டம் மட்டும்தான். ஆனால் அது மட்டுமே பிக்கால் கற்பனை செய்து பார்க்கக்கூடிய ஒரே விஷயமாக இருக்கவில்லை.

தீர்மானம் எடுக்கப்பட்டுவிட்டது.

மாலையில் வெகு நேரமாகி இருந்தது. புதிர்க்கட்டத்தின் ஓர் ஓரத்தை நோக்கி

www.t.me/tamilbooksworld

பிக் நடந்து சென்றது. அந்தச் சுவரை அடைந்தவுடன், பிக் அச்சுவரை மென்மையாகத் தொட்டது. பிறகு ஓரடி பின்னே சென்றது. அதன் பிறகு, தன் வலிமை முழுவதையும் ஒன்றுதிரட்டி சுவரில் வேகமாக மோதியதில் சுவரில் ஓட்டை விழுந்தது.
தான் உருவாக்கியிருந்த ஓட்டையினுள் காலெடுத்து வைத்து பிக் புதிர்க்கட்டத்தைவிட்டு வெளியேறியது.
இனி அது ஒருபோதும் புதிர்க்கட்டத்திற்குத் திரும்பி வரப் போவதில்லை. புதிர்க்கட்டம் மீண்டும் பிக்கிற்குத் தொடர்பற்ற ஒன்றாக ஆகிவிட்டது.
சில தேடல்கள் மிகவும் முக்கியமானவை.
சிலரது வாழ்க்கையை அவ்வளவு

www.t.me/tamilbooksworld

சுலபமாகக் கட்டுப்படுத்திவிட முடியாது. சில சுண்டெலிகள் பெரிதானவை.

து வ க் க ம்

www.t.me/tamilbooksworld

# கலந்துரையாடல் கேள்விகள்

www.t.me/tamilbooksworld

இந்தக் கதையை நீங்கள் ரசித்திருப்பீர்கள் என்றும், உங்களது சுற்றுச்சூழலில் நீங்கள் அவ்வளவாகக் கண்டுகொள்ளாமல் இருந்துவிட்ட சில விஷயங்களை நீங்கள் மீண்டும் கருத்தில் கொள்வதற்கு இது உங்களுக்கு உத்வேகம் அளித்திருக்கும் என்றும் நான் நம்புகிறேன். இப்புத்தகத்தின் செய்தி குறித்த உங்களுடைய எண்ணங்களையும் உணர்வுகளையும் உங்கள் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ள உங்களில் சிலர் ஆவலாக இருக்கக்கூடும். வேறு சிலர் இதை ஒரு நிறுவனத்தின் உறுப்பினர்களுடனான விவாதங்கள் மற்றும் ஆய்வுகளை வடிவமைப்பதற்கான ஒரு கருவியாகப் பார்க்கக்கூடும். புத்தகத்தின் இப்பகுதி, இதில் கூறப்பட்டுள்ள விஷயங்கள்

www.t.me/tamilbooksworld

குறித்துத் தொடர்ச்சியான சிந்தனையைத் தூண்டுவதற்காகவும், கலந்துரையாடல்களை ஊக்குவிப்பதற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் ஒவ்வொரு வாசகரும் தங்களுக்கு மிகவும் முக்கியமானவற்றை இப்புத்தகத்திலிருந்து தாங்களாகவே எடுத்துக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். பின்வரும் கேள்விகள் உங்கள் விவாதங்களை வழிநடத்துவதற்கோ அல்லது ஒழுங்கமைப்பதற்கோ வடிவமைக்கப்பட்டவை அல்ல, மாறாக உங்களது சிந்தனையைத் தூண்டிவிடுவதற்காகவே அமைக்கப்பட்டுள்ளன. எந்தக்

www.t.me/tamilbooksworld

கேள்வியிலிருந்து வேண்டுமானாலும் நீங்கள் துவங்கலாம், ஒரு குறிப்பிட்ட வரிசையில் செல்லாமல் எந்தக் கேள்விக்கு வேண்டுமானாலும் நீங்கள் தாவலாம், அல்லது இந்தப் பட்டியல்களை ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்துவிடவும் செய்யலாம். முதற்பட்டியலில் உள்ள கேள்விகள் தனிப்பட்ட சிந்தனையில் ஈடுபட விரும்புபவர்களுக்கானவை. மேக்ஸும், ஸெட்டும், பிக்கும் நம்மிடம் கூறுவதுபோல், தனிப்பட்ட சிந்தனைதான் நம்முடைய வளர்ச்சிக்கும் கற்றலுக்குமான மிக முக்கியமான அம்சமாகும். ஆனாலும், மற்றவர்கள் இக்கதையை எவ்வாறு புரிந்து கொண்டுள்ளனர், இதிலிருந்து என்ன உள்நோக்குகளைப்

www.t.me/tamilbooksworld

பெற்றுள்ளனர் என்று கேட்டுத் தெரிந்து கொள்வது உங்களுக்கு நிச்சயமாக உதவும். நீங்கள் தவறவிட்ட ஏதேனும் ஒன்றில் அவர்கள் கவனம் செலுத்தியிருக்கக்கூடும். அல்லது அவர்கள் பரிசீலிக்கும் பட்சத்தில் அவர்களுக்கு உதவக்கூடிய ஒரு குறிப்பிட்டப் படிப்பினையை நீங்கள் அடையாளம் கண்டிருக்கக்கூடும். பிற பட்டியல்களில் உள்ள கேள்விகள் இந்தப் பரிசீலனைகளினால் ஊக்குவிக்கப்பட்டவையே.

நீங்கள் உங்கள் நண்பர் குழாமுடன் அமர்ந்திருந்தாலும் சரி, உங்கள் சக ஊழியர்களுடன் ஒரு சந்திப்புக் கூட்டத்தில் இருந்தாலும் சரி, அல்லது உங்கள் சக மாணவர்களுடன் ஒரு வகுப்பறையில் இருந்தாலும் சரி,

www.t.me/tamilbooksworld

மேக்ஸ், பிக், ஸெட் ஆகியோரின் சாகசங்கள் குறித்து விவாதிப்பது உங்களுடைய சொந்த எண்ணங்களை வரையறுக்கவும் மெருகேற்றவும் உங்களுக்கு உதவக்கூடும். ஒரு நிகழ்வைப் பற்றி ஒருவர் புரிந்து கொண்டுள்ள விதம் குறித்து மற்றவர்கள் எதிர்க்கேள்வி எழுப்பி சவால்விடுவதும் தனியாக எவரும் வந்திராத சில புதுமையான முடிவுகளுக்கு வழிவகுக்கக்கூடும். ஒவ்வொருவரும் என்ன படிப்பினைகளை இக்கதையிலிருந்து பெற்றனர் என்பதைக் காதுகொடுத்துக் கேட்பது, வெவ்வேறு மக்கள் தங்கள் வாழ்வில் எதிர்கொண்டுள்ள பல வகையான கண்ணோட்டங்கள், பிரச்சனைகள், மற்றும் தீர்வுகளை

www.t.me/tamilbooksworld

மதிப்பதற்கும் அனுமதிப்பதற்கும் ஊக்குவிக்கும்.

www.t.me/tamilbooksworld

தனிநபர்களுக்கான கேள்விகள்

1.மேக்ஸ், பிக், மற்றும் ஸெட்டின் முக்கிய குணநலன்களை விவரியுங்கள். எந்த குணநலன்கள் பிரமிப்பூட்டுபவையாக உள்ளன? அவற்றில் எந்த குணநலன்களை நீங்கள் உங்களிடம் வளர்த்துக் கொண்டால் உங்களுக்கு மிகவும் பயனுள்ளவையாக இருக்கும்?

2. யார் உங்களுடைய மேலதிகாரியாக இருக்க வேண்டும் என்று நீங்கள் அதிகமாக விரும்புவீர்கள்: மேக்ஸா, பிக்கா, அல்லது ஸெட்டா? இவற்றில் யார் உங்களுடைய சக ஊழியராகவோ அல்லது உங்களின்கீழ் பணிபுரிபவராகவோ அல்லது உங்கள் நண்பராகவோ இருக்க வேண்டும் என்று நீங்கள் அதிகமாக விரும்புவீர்கள்? ஏன்?

www.t.me/tamilbooksworld

3. ஒரு சுவரின் ஊடாக நடந்து செல்வது சாத்தியமில்லை என்று மற்றவர்கள் அனைவரும் நினைத்த நேரத்தில் நீங்கள் மட்டும் அதன் ஊடாக நடந்து சென்ற ஒரு நேரம் உங்களுக்கு நினைவிருக்கிறதா? ஒரு புதிர்க்கட்டத்திலிருந்து தப்பிப்பதைப் பற்றி எவரொருவரும் நினைத்துக்கூடப் பார்க்காத ஒரு நேரத்தில் அதிலிருந்து தப்பி வெளியேறிய ஒரு நேரத்தை உங்களால் நினைத்துப் பார்க்க முடிகிறதா? அப்படியானால், நீங்கள் அதை எவ்வாறு சாதித்தீர்கள்? அப்படி இல்லை என்றால், அதைச் செய்வதிலிருந்து எது உங்களைத் தடுத்து நிறுத்தியது?

4.இன்று நீங்கள் வலம் வருகின்ற சில புதிர்க்கட்டங்கள் எவை? அவற்றை

www.t.me/tamilbooksworld

நீங்கள் தேர்ந்தெடுத்தீர்களா? அவற்றிலிருந்து நீங்கள் தப்பிக்க விரும்புகிறீர்களா? அதை எவ்வாறு நேர்மறையான, ஆக்கபூர்வமான வழியில் செய்வது?

5."பிக்" என்று தலைப்பிடப்பட்டுள்ள அத்தியாயத்தில், "நான் விளையாடிக் கொண்டிருக்கும் விளையாட்டு அதுவல்ல," என்று பிக் எந்த அர்த்தத்தில் கூறுகிறது? பிக் எந்த விளையாட்டை விளையாடிக் கொண்டிருக்கிறது?

6.நீங்கள் எந்த விளையாட்டை விளையாடிக் கொண்டிருக்கிறீர்கள்? அது உங்களுக்கு ஏற்ற விளையாட்டுதானா?

7. உங்கள் வாழ்க்கையைப் பற்றி நீங்கள் மேக்ஸிடம் கூறினால், மேக்ஸ்

www.t.me/tamilbooksworld

உங்களுக்கு என்ன அறிவுரையைக் கொடுக்கும்?

8. உங்களுடைய மிகப் பெரிய கவலைகள் அல்லது பயங்களைப் பற்றி நீங்கள் ஸெட்டிடம் கூறினால், ஸெட் உங்களிடம் என்ன கூறும்?

9.புதிர்க்கட்டங்களை மற்றவர்களுக்காக நீங்கள் உருவாக்கி இருக்கிறீர்களா? தங்கள் பங்களிப்பு ஏதுமின்றி, உங்களுடைய வடிவமைப்பில் உருவான பாதைகளில் சென்று கொண்டும், நீங்கள் வடிவமைத்த இலக்குகளைத் துரத்திக் கொண்டும் இருக்கும் மக்கள் உங்களுடைய வாழ்க்கையில் இருக்கின்றனரா? அது நியாயமானதுதானா? இதற்கு உங்கள் பதில் 'ஆம்' என்றால், ஏன்? 'இல்லை' என்றால், நீங்களோ அல்லது

www.t.me/tamilbooksworld

அவர்களோ எதை வித்தியாசமாகச் செய்ய வேண்டும்?

10.உங்கள் வாழ்க்கையோடு தொடர்புடைய நபர்கள் மேக்ஸ், பிக், ஸெட் ஆகிய சுண்டெலிகளைப் பற்றிக் கேள்விப்படும் போது, அவர்களில் யார் அதிக பலனடைவார்கள்? ஏன் ?

www.t.me/tamilbooksworld

குழுவினரோடு
கலந்துரையாடுவதற்கான கேள்விகள்
1. நீங்களோ அல்லது நீங்கள் அக்கறை கொண்டுள்ள மக்களோ ஓடிக் கொண்டிருக்கும் சில புதிர்க்கட்டங்கள் எவை? இந்தப் புதிர்க்கட்டங்களை நீங்கள் எவ்வாறு விவரிப்பீர்கள்? யார் அவற்றை வடிவமைத்தது? மக்களை எது ஓட வைத்துக் கொண்டு இருக்கிறது? தப்பியோடுவது அவர்களுக்கு நன்மை பயக்குமா?
2. "சுண்டெலிக்குள் ஒரு புதிர்க்கட்டம்" என்று தலைப்பிடப்பட்ட அத்தியாயத்தில், "மேக்ஸ், ஒரு சுண்டெலி புதிர்க்கட்டத்திற்குள் இருப்பது இங்கு பிரச்சனையல்ல, ஆனால் புதிர்க்கட்டம் அந்தச் சுண்டெலிக்குள் இருப்பதுதான் பிரச்சனையே," என்று ஸெட் எந்த

www.t.me/tamilbooksworld

அர்த்தத்தில் கூறுகிறது? இது உண்மை என்று நீங்கள் நினைக்கிறீர்களா? உண்மை என்று நீங்கள் ஒத்துக் கொண்டால், இது எவ்வாறு நிகழ்கிறது? யதார்த்தத்தில் தங்களுக்கு உள்ளேயே இருக்கும் புதிர்க்கட்டங்கள் வெளியே இருப்பதாக நம்பிக் கொண்டிருக்கும் மக்களுடைய புதிர்க்கட்டங்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவற்றிலிருந்து எவ்வாறு நாம் தப்பிப்பது?

3. மேக்ஸ், பிக், ஸெட் ஆகிய சுண்டெலிகள் புதிர்க்கட்டத்தைவிட்டுத் தப்பிச் செல்கின்றன. ஆனால் அவை ஒவ்வொன்றும் ஒரு தனித்துவமான வழியில் தப்பிக்கின்றன. ஒவ்வொரு சுண்டெலியும் எந்தெந்தப்

www.t.me/tamilbooksworld

பண்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது ? இச்சுண்டெலிகள் ஒவ்வொன்றும் பின்பற்றிய அணுகுமுறையிலிருந்து நம்மால் என்ன கற்றுக் கொள்ள முடியும்?

4. பிக்கின் உதவியின்றி மேக்ஸால் அந்தப் புதிர்க்கட்டத்தைவிட்டுத் தப்பிச் சென்றிருக்க முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

5. நீங்களோ அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவரோ ஒரு சுவரின் ஊடாக எப்போதேனும் நடந்து சென்று இருக்கிறீர்களா? அதை முயற்சிப்பதற்கு எது தேவை? ஏன் எல்லோராலும் அதைச் செய்ய முடிவதில்லை?

6. தனது திறமைகள் குறித்து ஸெட்

www.t.me/tamilbooksworld

கூறிய விளக்கத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அது அறிவார்ந்த விளக்கமாக உங்களுக்குத் தோன்றுகிறதா? ஸெட் நம்புவதை நீங்கள் நம்புகிறீர்களா?

7. ஸெட் ஏன் எல்லா நேரங்களிலும் சுவர்களின் நடந்து செல்வதில்லை?

8. மற்ற சுண்டெலிகள் அந்தப் புதிர்க்கட்டத்தைவிட்டுத் தப்பிச் செல்லும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அல்லது இது எல்லோருக்கும் சாத்தியமில்லையா? ஏன்?

9. பல விஷயங்களைக் கற்றுக் கொண்ட பிறகு மேக்ஸ் ஏன் மீண்டும் புதிர்க்கட்டத்திற்கு வந்தது?

10. இப்புத்தகம் தெரிவிக்கும் செய்தியில் நீங்கள் எதில் மிகவும்

www.t.me/tamilbooksworld

ஒத்துப் போகிறீர்கள்? எதை மிகவும் மறுக்கிறீர்கள்?

www.t.me/tamilbooksworld

அலுவலக சகாக்களோடு கலந்துரையாடுவதற்கான கேள்விகள்

1. மேக்ஸ் உங்கள் நிறுவனத்தை ஆய்வு செய்தால், உங்கள் நிறுவனம் பற்றி அது என்ன கூறும்? அது உங்களுக்கு என்ன அறிவுரை கொடுக்கும்?
2. உங்களுடைய நிறுவனத்தில் உள்ள அனுமானங்களையும், யாரும் அதிகமாகக் கண்டுகொள்ளாத விஷயங்களையும் ஸெட் மதிப்பீடு செய்தால், அதன் மதிப்பீடு என்னவாக இருக்கும்? அது உங்களுக்கு என்ன அறிவுரை கொடுக்கும்?
3. மேக்ஸும் ஸெட்டும் எழுப்பியப் பிரச்சனைகள் குறித்து அந்தப் புதிர்க்கட்டத்தில் இருந்த பல சுண்டெலிகள் ஏன் அசௌகரியமாக உணர்ந்தன? மாற்றம் குறித்த பயத்திலிருந்து இந்தச் சுண்டெலிகள்

www.t.me/tamilbooksworld

மீண்டு வந்துவிட்டன என்பது தெளிவாகத் தெரிகிறது. அப்படியானால், எதைப் பற்றிய பயம் அவற்றிடையே இன்னும் மீதமிருக்கிறது?

4. மேக்ஸ், பிக், மற்றும் ஸெட்டின் வலிமைகளை நீங்கள் எவ்வாறு விவரிப்பீர்கள்? இவற்றில் எந்தெந்த வலிமைகள் உங்களுடைய நிறுவனத்தில் உள்ளதாக நீங்கள் நினைக்கிறீர்கள்? எந்தெந்த வலிமைகள் குறைவாகப் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டு உள்ளன? இந்த வலிமைகளை எவ்வாறு உருவாக்குவது?

5. உங்களுடைய நிறுவனத்தில் அல்லது உங்களுடைய நிறுவனத்தின் சூழலில் இருக்கின்ற புதிர்க்கட்டங்கள்

www.t.me/tamilbooksworld

எவை? யார் அவற்றை வடிவமைத்தது? அவை ஏன் தொடர்ந்து நீடித்திருக்கின்றன? நீங்கள் மீண்டும் கருத்தில் கொள்ளத்தக்க, சீஸ் குறித்தத் தேடலுக்கு இணையாக நீங்கள் கருதுகின்ற, தீவிரமாக கவனத்தில் கொள்ளப்படாத இலக்குகள் எவை?

6. உங்கள் நிறுவனத்திலுள்ள விஷயங்களை மாற்றுவதில், துல்லியமாக எது குறுக்கே நிற்கிறது? உடனடியாக மாற்றப்படக்கூடிய மற்றும் மாற்றப்பட வேண்டிய விஷயங்கள் இருக்கின்றனவா? உடனடியாகவோ அல்லது குறுகிய காலத்திலோ மாற்றப்பட முடியாத, ஆனால் காலப்போக்கில் மாற்றப்படக்கூடிய மற்றும் மாற்றப்பட வேண்டிய விஷயங்கள் இருக்கின்றனவா?

www.t.me/tamilbooksworld

எதிர்காலத்தில் நேர்மறையான மாற்றம் ஏற்படுவதை உறுதி செய்வதற்கு இன்று மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் உள்ளனவா?

7. மேக்ஸ், பிக், அல்லது ஸெட்டின் பண்புநலன்களைக் கொண்ட மக்களால் உங்கள் நிறுவனத்தில் வெற்றிகரமாக விளங்க முடியுமா? ஏன்?

8. மேக்ஸ், பிக், ஸெட் ஆகியவற்றால் நல்ல தலைவர்களாக உருவாக முடியுமா? முடியுமென்றால், பின் ஏன் எந்தவொரு சுண்டெலியும் அவற்றைப் பின்பற்ற முன்வரவில்லை?

9. மேக்ஸ், பிக், மற்றும் ஸெட்டிடம் நீங்கள் எப்படிப்பட்டத் தலைமைத்துவப் பண்புநலன்களைப் பார்க்கிறீர்கள்? எந்தப் பண்புநலன்களைப் பெறுவது கடினம்?

www.t.me/tamilbooksworld

10. "புதிர்க்கட்டம் ஏன் இருக்கிறது?" போன்ற 'நகைப்புக்கிடமான' கேள்விகளுக்கு இணையாக உங்கள் நிறுவனத்தில் உள்ள கேள்விகள் எவை? நகைப்புக்கிடமான கேள்விகளைப் பாதுகாப்பாகக் கேட்கவும், அவற்றைத் தீவிரமாகக் கருதவும் உங்கள் நிறுவனத்தில் வாய்ப்பு உள்ளதா? இப்படிப்பட்டக் கேள்விகளை அடிக்கடிக் கேட்பதன் மூலம் உங்கள் நிறுவனம் பயனடையுமா?

www.t.me/tamilbooksworld

கல்வியாளர்களுக்கு ஒரு குறிப்பு

உங்களில் பலரைப் போலவே, கற்றுக் கொடுப்பதை நான் மிகவும் நேசிக்கிறேன். மாணவர்களின் வாழ்க்கையில் ஒரு நேர்மறையான வித்தியாசத்தை ஏற்படுத்துவதற்கான சிறந்த வழிகளை நான் தொடர்ந்து தேடிக் கொண்டிருக்கிறேன். வெறுமனே உண்மைத் தகவல்களையும் கண்டுபிடிப்புகளையும் வழங்குவது அல்லது உத்திகளையும் கட்டமைப்புகளையும் கற்றுக் கொடுப்பது இலக்காக இருந்தால், அது மிகவும் சுலபமானதாக இருக்கும். ஆழமான ஆய்வுகளை ஊக்குவிப்பதும், தலைசிறந்த சிந்தனைகளை உத்வேகப்படுத்துவதும், வகுப்பறையைவிட்டு வெளியேறிய

www.t.me/tamilbooksworld

பிறகும் தொடர்ந்து கற்பதற்கும் உருவாக்குவதற்கும் உதவக்கூடிய மனப் பழக்கங்களை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதும் நம்மில் பலருக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களாக உள்ளன. மிகக் கடினமான இவ்விஷயங்களில் சிலவற்றைச் செய்வதற்கு நாம் மேற்கொள்ளும் முயற்சிகளில் இப்புத்தகம் நமக்கு உதவும் என்று நான் நம்புகிறேன். அதுதான் இலக்கு. இரு விஷயங்களை இப்போது நாம் கருத்தில் கொள்ளலாம்:

முதலில், எந்த வகையான மாணவர்கள் இப்புத்தகத்தின் மூலம் பயனடைவார்கள்? மாணவர்களுடனும் கல்வியாளர்களுடனும் நான்

www.t.me/tamilbooksworld

கலந்துரையாடியதில், இரண்டு விதமான பதில்களை நான் செவிமடுத்திருக்கிறேன். தலைமைத்துவம், நிறுவனரீதியான நடத்தை, அதிகாரம் மற்றும் அரசியல், தொழில் முனைவு, மற்றும் உத்தி ஆகிய துறைகள் இப்புத்தகம் ஊக்குவிக்கின்ற விவாதத்தில் இருந்து பலனடையக்கூடும் என்று ஒரு குழுவினர் என்னிடம் தெரிவிக்கின்றனர். மாணவர்கள் தங்களுடைய வாழ்வில் செய்யும் மாபெரும் தவறுகளில் சில, தங்களுடைய முக்கியப் பாடத்தைத் தேர்ந்தெடுப்பது மற்றும் தங்கள் வேலையைத் தேர்ந்தெடுப்பது தொடர்பானவை என்றும், அவர்களது தேர்ந்தெடுப்புகளில் பல,

www.t.me/tamilbooksworld

அவர்களுடைய சொந்த இலக்குகளையும் ஆழ்விருப்பங்களையும் பிரதிபலிப்பதற்குப் பதிலாக, வெளியிலிருந்து வருகின்ற அழுத்தங்களையும் எதிர்பார்ப்புகளையும் பிரதிபலிக்கின்றன என்றும் இன்னொரு குழு என்னிடம் தெரிவிக்கிறது. வேறொருவருடைய கனவுகளைப் பின்தொடர்வதில் பல மாணவர்கள் ஒருசில வருடங்களையும், சில மாணவர்கள் தங்கள் ஒட்டுமொத்த வாழ்க்கையையும் செலவிடுகின்றனர் என்பது வருத்தத்திற்கு உரிய விஷயம். இந்த விவகாரங்களைத் தங்கள் பயணத்தின் ஆரம்பக் காலகட்டங்களிலேயே சமாளிப்பதற்கு

www.t.me/tamilbooksworld

மாணவர்களை ஊக்குவிப்பதில் இப்புத்தகம் உதவக்கூடும். இரண்டாவதாக, ஒரு பயிற்சி வகுப்பில் ஒரு புதிய விஷயத்தை அறிமுகப்படுத்துவதற்கான செலவைப் பற்றி நான் நன்றாக அறிவேன். இந்த விஷயம் எந்தப் பகுதிக்கு உரியது என்பதையும், ஒரு பாடத்திட்டத்தை எவ்வாறு உருவாக்குவது என்பதையும் நாம் கண்டறிய வேண்டியது அவசியம். இந்த விஷயத்தைப் பொறுத்தவரை, மாணவர்கள்மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்பதுதான் எனது அறிவுரை. வகுப்பறைக் கலந்துரையாடல்களைத் துவக்குவதற்கும் அவற்றை வழிநடத்துவதற்கும் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய 'கலந்துரையாடல்

www.t.me/tamilbooksworld

கேள்விகள்' இப்புத்தகத்தில் இருந்தாலும், 'குறைவான போதனை அதிகமான கற்றலுக்கு வழிவகுக்கும்' என்ற வகையைச் சேர்ந்த புத்தகம் இது. இந்நூலை மாணவர்களுக்குக் கொடுத்துவிட்டால், மிகச் சிரமமான விஷயங்களை அவர்களே கையாண்டு கொள்வார்கள். இப்படிப்பட்ட வகுப்புகளையே மாணவர்கள் தங்கள் நினைவில் வைத்துக் கொள்கின்றனர் என்பதை நான் அனுபவரீதியாகக் கண்டிருக்கிறேன்.

www.t.me/tamilbooksworld

மேலாளர்களுக்கு ஒரு குறிப்பு

கடந்த பத்து வருடங்களாக, சுமார் பத்தாயிரம் தொழிலதிபர்களுக்கும், உயரதிகாரிகளுக்கும், மேலாளர்களுக்கும் நான் கற்றுக் கொடுத்து வந்துள்ளேன். இந்தக் கற்பிப்பின் பெரும்பகுதி ஹார்வர்டு பிசினஸ் ஸ்கூலில் நிகழ்ந்துள்ளது. அங்கு எம்பிஏ வகுப்புகளையும், உயர் நிர்வாகிகளுக்கான பயிற்சி வகுப்புகளையும் நான் அதிக அளவில் நடத்தி வருகிறேன். உலகெங்கிலும் உள்ள, அனைத்துத் துறைகளைச் சேர்ந்த நிறுவனங்களுக்குச் சென்று ஆலோசனைகளையும் பயிற்சிகளையும் நான் அதிக அளவில் வழங்கி வந்திருக்கிறேன். என்னுடைய கற்பிப்பு மற்றும் ஆலோசனையின் பெரும்பகுதி பேச்சுவார்த்தை மற்றும்

www.t.me/tamilbooksworld

உத்திசார்ந்த தீர்மானம் மேற்கொள்ளுதல் ஆகியவற்றின்மீது கவனம் செலுத்தினாலும், மேலாளர்களும் உயரதிகாரிகளும் அன்றாடம் சந்திக்கின்ற பல்வகைப்பட்டப் பிரச்சனைகள் குறித்த ஆழமான கலந்துரையாடலில் ஈடுபடுவதற்கான வாய்ப்பும் எனக்குக் கிடைத்துள்ளது. அவர்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சனைகளில் சிலவற்றை நான் கீழே கொடுத்திருக்கிறேன்:

•எங்களது ஊழியர்களை எவ்வாறு உத்வேகப்படுத்துவது?

•ஊழியர்களுக்கான ஊக்கத் தொகைகளை எவ்வாறு வடிவமைப்பது?

•புதுமையை சுவீகரித்துக் கொள்ளும்

www.t.me/tamilbooksworld

கலாச்சாரத்தை எவ்வாறு உருவாக்குவது?

•மிகத் திறமையானவர்களை எவ்வாறு நியமிப்பது?

•தலைசிறந்த தலைவர்களை எவ்வாறு உருவாக்குவது?

•எங்களது துறையிலும் எங்களுடைய வாடிக்கையாளர்களின் பார்வையிலும் எவ்வாறு எங்களைத் தனித்துவத்துடன் நிலைநிறுத்திக் கொள்வது?

•பெரும்பாலான நேரங்களில், நமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டப் பொருளாதார மற்றும் போட்டிக் காரணிகளின் தயவில் நாம் இருக்கும் ஒரு சூழலில் எவ்வாறு அதிகக் கட்டுப்பாட்டை நிலைப்படுத்துவது?

•நாங்கள் பின்தொடர்ந்து செல்கின்ற இலக்குகளுக்கு எப்படிப்பட்ட நிறுவன

www.t.me/tamilbooksworld

அமைப்பு பொருத்தமானதாக
இருக்கும்?
•நாங்கள் தவறான இலக்குகள்மீது
கவனம் செலுத்திக்
கொண்டிருக்கிறோமா?
இக்கேள்விகள் மற்றும் பிரச்சனைகள்
சிலவற்றைக் குறிவைப்பதற்கு
இப்புத்தகம் உங்களுக்கு உதவும் என்று
நான் நம்புகிறேன். நான் உடன்
பணியாற்றியுள்ள மேலாளர்கள்
மற்றும் உயரதிகாரிகளில்
பெரும்பாலானவர்கள்
சாதுரியமானவர்களாகவும், கடினமாக
உழைப்பவர்களாகவும், நல்ல நோக்கம்
கொண்டவர்களாகவும் உள்ளனர்.
ஆனாலும், இப்படிப்பட்டப்
பிரச்சனைகளுடன் அவர்கள்
தொடர்ந்து போராடி வருகின்றனர்.

www.t.me/tamilbooksworld

இதற்குக் காரணம், அறிவு, முயற்சி, நோக்கம் ஆகியவை தேவை என்றாலும், நாம் எதிர்கொள்கின்ற விரக்தியூட்டும் பிரச்சனைகள் சிலவற்றைச் சமாளிப்பதற்கு இவை மட்டுமே போதுமானவையாக இல்லாமல் போவதுதான். நாம் ஓரடி பின்னே சென்று நம்முடைய அனுமானங்கள்மீது கேள்வி எழுப்புவதும், புதிய வழிகளில் பழையவற்றைப் பார்ப்பதும், கடினமாக முயற்சிப்பதோடு வித்தியாசமாக முயற்சிப்பதும் அவசியம். எல்லாவற்றுக்கும் மேலாக, 'ஏன்' என்றும், 'ஏன் கூடாது' என்றும் மக்கள் தொடர்ந்து கேட்பதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்குவதும் அவசியம். அப்படிப்பட்ட ஒரு சூழலை

www.t.me/tamilbooksworld

உங்கள் நிறுவனத்தில் உருவாக்குவதற்கு உங்களுக்கும் உங்கள் சக ஊழியர்களுக்கும் இப்புத்தகம் உதவும் என்று நான் நம்புகிறேன்.

www.t.me/tamilbooksworld

நூலாசிரியருக்கான கேள்விகள்

1. மேக்ஸ், பிக், ஸெட் ஆகிய சுண்டெலிகளுக்கு என்ன நிகழும்?

இந்த மூன்று சுண்டெலிகளின் கதை இதோடு முடியப் போவதில்லை. அடுத்து என்ன நிகழ்கிறது என்பதைப் பற்றி ஒருசில விஷயங்களை என்னால் கூற முடியும்: மேக்ஸ், பிக், மற்றும் ஸெட் ஆகியவற்றின் சாகச முயற்சிகள் புதிர்க்கட்டத்திற்கு வெளியேயும் தொடர்கின்றன. அதே நேரத்தில், அவை சென்று வர வேண்டிய மேலும் பல புதிர்க்கட்டங்கள் அங்கு உள்ளன. அவற்றின் வாழ்க்கை அதிக சுவாரசியமான வழிகளில் ஒன்றோடு ஒன்று மீண்டும் குறுக்கிடுகின்றன. கதையில் புதிய புதிய கதாபாத்திரங்கள் நுழைகின்றன. கதைத்திட்டம் வலுப்பெறுகிறது.

www.t.me/tamilbooksworld

2. இந்த மூன்று கதாபாத்திரங்களையும் உருவாக்குவதற்கு எது உத்வேகம் கொடுத்தது?

நான் முதன்முதலாக 'என் சீஸை நகர்த்தியது யார்?' புத்தகத்தைப் படித்து முடித்தக் கணமே மேக்ஸ் கதாபாத்திரம் பிறந்தது. அப்புத்தகம் குறித்து என்னுள் எழுந்த அறிவுபூர்வமான எதிர்க் கேள்விகளை மேக்ஸ் சுவீகரித்துக் கொண்டது. ஆனால் மேக்ஸ் சற்று வளரும் வரை, அதாவது என் கருத்தாக்கம் பக்குவம் அடையும்வரை, என்னால் மேக்ஸின் கதையை எழுத முடியவில்லை. நச்சரிக்கும் கேள்விகள் மூலம் பிற சுண்டெலிகளுக்குத் தொந்தரவு ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு மேக்ஸ் வளர்ந்தபோது, அது பிக்கையும் ஸெட்டையும் சந்திக்கிறது. ஸெட்டும்

www.t.me/tamilbooksworld

பிக்கும் புதிர்க்கட்டத்தில்தான் எப்போதும் இருந்து வந்தன என்றாலும், அவற்றின் கதைகளைப் புனைவது அதிக சிரமமாக இருந்தது. எல்லாவற்றையும் ஒன்றுதிரட்டி, தேவையான உரையாடல்களைத் துவக்குவதற்கு மேக்ஸ் எங்களுக்குத் தேவைப்பட்டது. மிக விரைவில் அச்சுண்டெலிகள் ஒவ்வொன்றும் தவிர்க்க முடியாதவையாக ஆகிவிட்டன. ஏனெனில், இவை மூன்று கதைகள் அல்ல, மாறாக ஒரே கதைதான் என்பதை நான் கண்டறிந்தேன். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்கான அறிவுபூர்வமான செயல்விடைகள் பெரும்பாலான சமயங்களில் எப்படி முழுமையற்றவையாக

www.t.me/tamilbooksworld

இருக்கின்றனவோ, அதேபோல் மேக்ஸின் கதையும் முழுமை அடையாமலேயே இருந்துவிட்டது.

3. உங்களுக்கு மிகவும் பிடித்தக் கதாபாத்திரம் எது?

உங்கள் குழந்தைகளுக்கிடையே யாராவது ஒருவரைத் தேர்ந்தெடுக்குமாறு உங்களிடம் கேட்பதைப் போன்று இருக்கிறது இது; அவர்கள் அனைவரையும் சம அளவிலேயே நீங்கள் நேசிக்கிறீர்கள். அதே சமயம் இக்கதையைப் படிக்கும்போது, எனக்கு மிகவும் பிரமிப்பூட்டும் கதாபாத்திரம், அக்கணத்தில் என் வாழ்வில் என்ன நடந்து கொண்டிருக்கிறது அல்லது நான் எதைப் பற்றி சிந்தித்துக் கொண்டு இருக்கிறேன் என்பதைப்

www.t.me/tamilbooksworld

பொறுத்தது.

4.எந்தக் கதாபாத்திரத்தைப் பற்றி எழுதுவது உங்களுக்கு மிகவும் கடினமாக இருந்தது?

ஸெட். (ஆனால் சில சமயங்களில் பிக்கைப் பற்றி எழுதுவது கடினமாக இருந்தது.)

www.t.me/tamilbooksworld

நன்றி

இப்புத்தகத்தின் உருவாக்கத்தில் தாக்கம் விளைவித்துள்ள பலருக்கு நான் நன்றிக்கடன் பட்டுள்ளேன். நான் பணியாற்றி வரும் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் என்னில் உன்னதத்தை ஊக்குவித்துக் கொண்டிருக்கும் பல அபாரமான பேராசிரியர்களால் சூழப்பட்டிருக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்துள்ளது. புதிய கருத்துக்களின் உருவாக்கத்தை ஊக்கப்படுத்துவதோடு, அதை நடைமுறைச் சாத்தியமாக்குவதற்கு ஆவன செய்யவும் உதவுகின்ற ஒரு சூழலும் கலாச்சாரமும் வாய்த்துள்ளது எனக்குக் கிடைத்துள்ள ஒரு வரப்பிரசாதம். இப்புத்தகத்தின் பதிப்பாளர்களான பெர்ரட்-கோய்லர் நிறுவனத்தினரிடம்

www.t.me/tamilbooksworld

என்னை அறிமுகம் செய்து வைத்தது எனது முன்னாள் மாணவர்களான ஈத்தன் வில்லிஸ் மற்றும் ரேன்டி கார்ன். இப்புத்தகத்தின் வெளியீட்டில் கொண்டுவந்து நிறுத்திய செயலைத் துரண்டிவிட்டமைக்காக ஈத்தன் மற்றும் ரேன்டி உங்களுக்கு நன்றி. பெர்ரட்-கோப்லரில் அருமையான தொழில்முறைக் கலைஞர்களோடு இணைந்து பணியாற்றியதில் எனக்குப் பெருமகிழச்சி. குறிப்பாக ஸ்டீவ் பியர்சான்டிக்கு நான் வெகுவாகக் கடமைப்பட்டுள்ளேன். நான் எழுதியிருந்தது குறித்து முதலில் இருந்தே அவர் போரார்வம் காட்டி வந்தார். இப்புத்தகத்திற்காகத் தங்களுடைய நேரத்தையும் சக்தியையும் நிபுணத்துவத்தையும்

www.t.me/tamilbooksworld

கணிசமாகச் செலவிட்ட ஜீவன் சிவசுப்பிரமணியம், கிறிஸ்டன் ஃபிரான்ட்ஸ், டயானா பிளாட்னர், மரியா ஜீசஸ் அகுய்லோ மற்றும் பெர்ரட்-கோய்லரைச் சேர்ந்த பலருக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

என் வாழ்வில் இடம்பெற்றிருந்த பல அதிஅற்புதமான ஆசிரியர்களுக்கு நான் என்றென்றும் நன்றிக்கடன் பட்டுள்ளேன். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்: என் உயர்நிலைப் பள்ளி நாடக ஆசிரியரான திரு. லெய்டர்; பட்டப் படிப்பு முடித்தக் கையோடு நான் சேர்ந்த தற்காப்புக் கலைப் பள்ளியின் நிறுவனர் திரு. சிஃபு பிரவுன்; ஓர் இளம் ஆராய்ச்சியாளராக நான் சேர்ந்த கெல்லாக் ஸ்கூல் ஆஃப்

www.t.me/tamilbooksworld

மேனேஜ்மென்டில் பணியாற்றிய பேராசிரியர் முர்னிகான் ஆகியோர். இறுதியாக, ஆனால் மிக முக்கியமாக என் குடும்பத்தினருக்கு நான் வெகுவாக நன்றிக் கடன்பட்டுள்ளேன். எவரொருவரும் தங்களுடைய வாழ்க்கையில் தங்களுக்கென்று ஒரு சொந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதன் மதிப்பை எனக்குக் கற்றுக் கொடுத்தமைக்காகவும், என்னுடைய லட்சியத்தையும், என்னுடைய ஒவ்வொரு யோசனையையும், ஒவ்வொரு முயற்சியையும் ஊக்குவித்தமைக்காகவும் என் பெற்றொர் சந்தர் மல்ஹோத்ராவுக்கும் சுதேஷ் மல்ஹோத்ராவுக்கும் கோடானுகோடி நன்றிகள். என் சகோதரர் மனு மல்ஹோத்ரா தன்

www.t.me/tamilbooksworld

வாழ்வில் தான் சந்தித்த எண்ணற்ற சுவர்களின் ஊடாக நடந்து சென்றுள்ளார். அச்சுவர்கள் குறித்து அவருக்குப் பிரக்ஞை இருந்ததா என்று நான் வியக்கிறேன். என் மனைவி ஷிகா, புதிர்க்கட்டடத்திற்கு அப்பால் என்ன இருக்கிறது என்பதைக் கண்டறிவதற்கான எனது தேடலில் எனக்கு ஆதரவாக இருந்து வலுவூட்டுவதோடு மட்டுமல்லாமல், நான் ஏறுவதற்கு சிரமப்படுகின்ற சுவர்களை உடைத்துத் தரைமட்டமாக்குவற்கும் உதவுகிறார். எனது படைப்பில் என் குழந்தைகளும் தங்களுடைய பங்களிப்பை அளித்துள்ளனர்; அவர்களைப் பார்க்கும்போது, பெரிய பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டும்

www.t.me/tamilbooksworld

என்ற ஆவல் என்னுள் பொங்குகிறது.

www.t.me/tamilbooksworld

நாகலட்சுமி சண்முகம்

மொழிபெயர்ப்பாளர்

நாகலட்சுமி மிகச் சிறந்த ஊக்குவிப்புப் பேச்சாளர். மக்களிடம் பரிபூரண மாற்றம் கொண்டுவரும் கருத்தரங்குகளை இவர் நடத்தி வருகிறார். அமெரிக்காவின் ஊக்குவிப்புப் பயிற்சியாளர்களில் தலைசிறந்தவராக விளங்கி வருபவரும், 'சிக்கன் சூப் ஃபார் த ஸோல்' புத்தகங்களின் இணையாசிரியருமான ஜாக் கேன்ஃபீல்டிடம் அமெரிக்கா சென்று நேரடிப் பயிற்சி பெற்றவர். முழுநேரப் பேச்சாளராக ஆவதற்கு முன்பு, பத்து வருடங்கள் கணினித் துறையில் தலைமைப் பொறுப்பு உட்படப் பல பதவிகளை வகித்தவர்.

தமிழ் நாடகத் துறையின் முன்னோடி

www.t.me/tamilbooksworld

மேதைகளான டிகேஎஸ் சகோதரர்களில் ஒருவரான திரு முத்துசாமி அவர்களின் பேத்தியான நாகலட்சுமியிடம் இருந்த இயல்பான தமிழ் ஆர்வம் அவரைத் தமிழ் மொழிபெயர்ப்புத் துறைக்கு இழுத்து வந்துள்ளது. அவரது மொழிபெயர்ப்பு நூல்களில் ரோன்டா பைர்ன், டாக்டர் ஜோசப் மர்ஃபி, ஜான் மேக்ஸ்வெல், டாக்டர் ஸ்பென்சர் ஜான்சன், நார்மன் வின்சென்ட் பீல், ஜான் கிரே, கேரி சேப்மேன், ஜாக் கேன்ஃபீல்ட், மார்க் விக்டர் ஹான்சன், மற்றும் டேல் கார்னகி போன்ற சர்வதேச அளவில் கொண்டாடப்படுகிற தலைசிறந்த நூலாசிரியர்களின் நூல்களும் அடங்கும்.

நாகலட்சுமி தனது கணவர் PSV

www.t.me/tamilbooksworld

குமாரசாமியுடனும், தன் மகன்கள் சித்தார்த் மற்றும் மனோரஞ்சனுடனும் தற்போது மும்பையில் வசித்து வருகிறார்.

www.t.me/tamilbooksworld



இப்புத்தகத்தின் ஆசிரியர் தீபக் மல்ஹோத்ரா, ஹார்வர்டு பிசினஸ் ஸ்கலில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். அவர் அங்கு எம்பிஏ மாணவர்களுக்குக் கற்பித்து வருகிறார். தனது கற்பித்தல் முறைக்காகவும், தான் செய்து வரும் ஆய்வுகளுக்காகவும் அவர் பல பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். ஹார்வர்டு பிசினஸ் ஸ்கூலின் 2011 எம்பிஏ வகுப்பிற்கான நல்லாசிரியர்

www.t.me/tamilbooksworld

பட்டம் அவருக்குக் கிடைத்துள்ளது. இன்டர்நேஷனல் இன்ஸ்டிடியூட் ஃபார் கான்ஃபீலிக்ட் பிரிவென்ஷன் அண்ட் ரெனல்யூஷன் அமைப்பு, அவர் மேக்ஸ் பேஸர்மேனுடன் இணைந்து எழுதிய ஒரு பிசினஸ் புத்தகத்திற்கு 2008ம் ஆண்டின் சிறந்த புத்தகம் என்ற பரிசை வழங்கியுள்ளது.

அவர் பல துறைகளைச் சேர்ந்த சர்வதேச நிறுவனங்களுக்குப் பயிற்சி அளித்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல் ஆகியவற்றிலும் ஈடுபட்டுள்ளார். புகழ்பெற்ற நிர்வாகிகளின் குழுக்களுக்கு இடையே பேச வருமாறு அவருக்கு அடிக்கடி அழைப்பு விடுக்கப்படுகிறது.

'உன் சீஸை நகர்த்தியது நான்தான்' புத்தகம் 'வாஷிங்டன் போஸ்ட்'

www.t.me/tamilbooksworld

பத்திரிகை தொகுத்து வழங்கும் அதிகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கும் புத்தகப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. இந்நூல் பதினைந்து மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு உள்ளது.

தீபக் மல்ஹோத்ரா குறித்து மேலும் தகவலறிய www.DeepakMalhotra.com என்ற இணையதளத்தை அணுகவும்.

இப்புத்தகத்தைப் பற்றி மேலும் தகவலறிய www.RazeTheMaze.com என்ற இணையதளத்தை அணுகவும்.

www.t.me/tamilbooksworld

## பாராட்டு மழையில் . . .

"விஷயங்கள் ஏன் இப்படி இருக்கின்றன என்பது குறித்து உங்களைக் கேள்வி கேட்கத் தூண்டும் புத்தகங்கள் அவ்வப்போது வருவதுண்டு. இது அப்படிப்பட்ட ஒரு நூல். அடுத்தவர்கள் வகுக்கும் எல்லைக் கோட்டிற்குள் அடங்கிக் கிடக்காமல், அவர்கள் விதிக்கும் கட்டுப்பாடுகளுக்குள் ஒடுங்கிக் கிடக்காமல் நீங்கள் உங்களுக்காக உருவாக்கிக் கொள்ளக்கூடிய ஓர் உலகத்தை தரிசிக்க இப்புத்தகத்தில் தீபக் மல்ஹோத்ரா உங்களுக்கு வழிகாட்டுகிறார். ஓர் அருமையான புத்தகம்."

- ஸ்டீபன் கவி,

**'அதிக ஆற்றல்வாய்ந்த மனிதர்களின் 7 பழக்கங்கள்' புத்தகத்தின் ஆசிரியர்**

"அதிக சக்திவாய்ந்த படிப்பினையை உள்ளடக்கிய ஓர் அற்புதமான புத்தகம். அனைவரும் கண்டிப்பாகப் படிக்க வேண்டிய ஒரு நூல் இது."

- வினோத் கோஸ்லா,

**முன்னாள் தலைவர், சன் மைக்ரோசிஸ்டம்**

"இப்புத்தகம் ஸ்பென்சர் ஜான்சனின் 'என் சீஸை நகர்த்தியது யார்' புத்தகத்திற்கான சரியான பதிலடி. கையில் எடுத்துவிட்டால், இதைப் படித்து முடிக்காமல் உங்களால் கீழே வைக்க முடியாது."

- பில் ஜார்ஜ்,

**பேராசிரியர், ஹார்வர்டு பிசினஸ் ஸ்கூல்**

"நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் தொழில்முறை வாழ்க்கையிலும் நம் சூழலை மாற்றி ஒரு புதிய யதார்த்தத்தை உருவாக்குவது எப்படி என்பதைக் கற்றுக் கொள்ளத் தேவையான திடமான படிப்பினைகளை வழங்கும் ஒரு பிரமாதமான புத்தகம் இது."

- தீபக் சோப்ரா,

**மருத்துவர், நூலாசிரியர்**



MANJUL
www.manjulindia.com

www.t.me/tamilbooksworld